சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானசம்பந்த குருப்யோநம:

நோச்சியமென்றுவழங்கும்

தேவாரவைப்புத்தலமாகிய எச்சிலிளமர்ப்பதி

# ஸ்ரீமெய்கண்டதேவர்

# நான்மணிமாலை.

இது

உறையூர்ச் சைவசித்தாந்த சபைத்தனசாலாதிபரும்

கு. கா. வாளாப்பேட்டைச்

சித்தாந்த ஞானப்பிரகாச சபைத்தலைவருமாகிய ஷை உறையூர்

**தே. பெரியசாமிபிள்ளையால்**

இயற்றப்பெற்று.

பூவாளூர்

சைவசித்தாந்த சங்கத்தின் அங்கத்தினரும்

இந்நூலாசிரியர்மாணாக்கருமாகிய

ஷை பூவாளூர்

**அ. ரா. அமிர்தஞ்செட்டியாரால்,**

பதிப்பிக்கப்பெற்றது.

1910

சிவமயம்.

# இந்நூலின் பாயிரத்திலுள்ள நடுவெழுத்தலங்காரக் குறிப்புரை.

1. விண்ணின்பேர், நாவட்பேர், வெறியின்பேர், கடிப்பேர், மெல்லியர்காலணியின்பேர், சென்னியர் பேர், கட்பேர், என்னும் இவற்றின் பரியாயநாமங்கள் நபம், பஞ்ச, அசப், காவல், தண்டை, பாணர், பார்வை என்பன, இவற்றின் நடுவெழுத்துக்கள், பஞ்சவண்ணர், ஏனைய முதல் கடை எழுத்துக்கள், நேர்நேராகப் புணர்ந்துழி எய்தும் பதங்கள், நம், (இநன்) பச, அப், கால், தடை, பார், பாவை என்பன.

2. மாலுமி, வானரம், மாற்றார், மாமை, புன்காலி, என்பனவற்றின் பரியாயநாமங்கள், மீகான், மந்தி, எதிரி, காமர், பாதிரி, என்பன, இவற்றின் நடுவெழுத்துக்கள் காந்திமதி, ஏனையமுதல், கடை எழுத்துக்கள் நேர்நேராகப் புணர்ந்துழி உண்டாகும் பதங்கள், மீன், மதி, எரி, கார், பாரி, என்பன.

ஆருத்ராதரிசன மகா புண்ணிய காலத்திலே ஸ்ரீசிதம்பர க்ஷேத்திரத்தில் இந்நூலைப் பிரசுரிக்க வேண்டுமென்னும் பேராவாவால் விரைவிற் பதிப்பித்த படியால் இந்நூலிற் கூறப்பெறும் சைவசித்தாந்த நுட்பங்களை விளக்கி ஓர் குறிப்புரை எழுத வெண்ணியிருந்த என் எண்ணங் கடையுற்றதல்லாமற் சிலவிடங்களிற் பதிப்புப் பிழைகளும் நேர்ந்தன அவற்றை யெல்லாமறிந்தோர்கள் திருத்திக்கொள்வார்களாக

(23)வது பக்கத்தில் (24)வது செய்யுளில் விடுபட்ட (20)வது வரி,

நாற்றிதழ்த் தாமரை மேற்றவன் பதமும்.

இங்ஙனம்

அ. ரா. அமிர்தம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# சிறப்புப்பாயிரங்கள்.

---

## திருக்கயிலாயபரம்பரை தாயுமானசுவாமிகள்மரபு எச்சிலிளமர் மெய்கண்டதேவராதீனத்திற்குரிய சிவப்பிரகாசசுவாமிகள் அருளியவை.

சொல்லாரும் பொன்னிவளஞ் சுரந்தாரும் புனனா
ட்டிற் சுடரி னோங்கி, வில்லாருங் கொடுமுடிகண்
மேலாருந் தென்கயிலை விலங்க வொப்ப, னெல்லாரு
நன்மணிகளிழைத்தாரும் புரிசைநிறை யிளமர்மேவிக்,
கல்லாருங் கல்விநலங் கலந்தாருந் தெருளுமடங்
கவின வாரும். (க)

சீரோங்கு திருக்கயிலைத் திருநந்தி மரபுதித்த
தேவ னெங்கோன், பாரோங்கு சந்தான பரம்பரை
மெய் யடியர்தினம் பணிவிற் சாத்துந், தாரோங்கு
சேவடிக டழைத்தோங்கு மெய்கண்ட தலைவற்
கன்போ, டோரோங்கு பாமாலை யியம்பினனான் மணி
மாலை யேவ னென்னில். (உ)

தருவுறையூ ரைவண்ணத் தகையுறையூர் வேத
நெறித் தலைவர் கீர்த்தி, மருவுறையூ ராகமச்செம் மதி
யுறையூ ரெக்கலையு மதிக்கச் சாற்றக், குருவுறையூ
ரன்புமருள் கொடையுறையூ ரெவ்வளமுங் குறையா
தோங்குந், திருவுறையூர் முத்தியருட் டிருவுறையூ
ராமுறையூர் செப்புங் காலே. (௩)

இவ்வுறையூ ரினிதமரு மிருங்கொடையா னுயர்
தேவ ராய னென்னுந், தெவ்வரிடர் களைவலத்தான்
செய்தவத்தா லவதரித்த தீரன் மார, னெவ்விடா வுரு
நலத்தா னுயர்கல்விப் பெருவளத்தா னொழுக்க
மன்போ, டெவ்வமிலா வாசார வியற்கையுளான் றவந்
தானத் திறைவ னின்னும். (௪)

கைவண்ணத் துடையானுங் கதிர்வண்ணத் தலரா
னுங் காணற் கெட்டா, வைவண்ணப் பெருந்தகையி
னருததயா மபபூசை யனபா லாற்று, முய்வண்ணத்
திறமுடையா னுயர்சைவ சித்தாந்த வுணர்வேமேயாங்
கச், செய்வண்ணம் பலசைபகள் சேர்த்தளிப்பா
னவன்பெரிய சாமிச் செம்மல். (௫)

தொண்டனை மிவன்றனக்குத் தோழனை மெல்லோர்
க்குந் தொல்பூ வாளுந், ரண்டர்நா யகற்போற்று மமிர்த
நா மத்தகையா னறிந்திந் நூலைப், பண்டிதபா லரும்
படித்துப பததிநலம் பெறவெண்ணிப் பரிந்த லேகங,
கொண்டெழுதி டாவெழுத்திற் குயிற்றியரங் கிடை
யுலவக் கொடுத்தான் மன்னோ. (௬)

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து
அடியார் குழாங்களிலொருவராகிய

## பரமசிவசுவாமிகள்

அருளியவை

வின்மேலொங்குற பொழிலூறந்தைப் பொய்ப்பசா மிக்
கவிஞர் வேந்தர் வேந்துக், கண்ணொன்றுங்கு மெச்சியின
பார்ப்பதுமெய் கண்டகுரு சரணா போதுக், கெண்
ணொன்றுங்கு பணிபாலை பொன்னிணைந்து கவிபலவி னியற்றி
யிந்தானை, பண்ணொன்றுங்கு மன்பனைநக்குக் கண்ணொன்றுங்கு
மணியெனவே மதிக்கமாதோ

அத்தகைய னற்றுறைத் தப்பலகலையு மாய்ந்தாரு
மமைந்ததாய், வித்தகரைமூ பூவாணர் தனிஞானையுஞ்
சித்தாந்த மேன்மை சான்ற, வுத்தமனா மெறுற்ய
ருப நன்பகு வுளங்கொண்டே போற்கக் காலோ.
புத்தமுத மெனப்புலவர் கொண்டாட வையறுப
புகழ்யாற் றுவின

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்து
அடியார் குழாங்களிலொருவராகிய

## சண்முகசுவாமிகள்

அருளியவை

மடல்விரிந்து மதுவொழுகு மொழிறிக்த வின
மார்நகர் மடத்தின் மேவு, முடனிறைந்த வுயிரினிகர்

சந்தான குருக்கலை னுப்பாயத்த், திடன்மிகுந்த பயனளிக்கு மெனவொருநான் மணிமாலை யிசைத்தா னத்தைக், கடல்வருநல் லமுதென்கோ கற்கண்டென்கோ வன்றிமொழைக் கனியனப்ப. ௧

இத்தகைய நூலியற்ற விருந்தவஞ்செய் தானுற ந்தை யெழுந்த தீபா, லைங்கரத்த் கல்வியறி வருள் தவந்த அப்பலவு மொருங்கு மாயந்த, சுத்தசத்தி னிலையுணர்ந்தோன் சந்தானு சிரியர்தந் தலைமேற் கொள்ளுந்த, சுந்தரனார் தார்மதிக்கும் பெரியசா மிப்பெயர்கொள் சுகிர்தன் மாதோ. ௨.

திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனத்து

அடியார் கூட்டங்களிலொருவராகிய

## சொக்கலிங்கசுவாமிகள்.

அருளியவை.

திருக்கயிலாய பரம்பரை யுதித்த சிவப்பிரகாச மெய்க்குரவ, னிருக்குமெய் கண்ட தேவனைய மட த்தி லெழுந்தமெய் கண்டமா மணிதாட, கருக்கனி லைவிடக டான்மணி மாலை மணிக்கன னவமென வென்னெனை, மருக்கம ழூலக்கதைச் சைவசித் தாந்த பாசனைத் தவமுதி யின்னும்.

சீரவளர் கமலைச் செம்மலும் மகிழ்ந்தேவரா யத்தவ னின்றேமுனை? பார்வள குறையூர் மந்தவண் தேசப் பண்பவ ரருத்தயா மத்தி, தேர்வளர் தூயக் கட் டளை யினிதி னியற்றிடுந் தவநெறி பூண்டோன், கார்

வளர் கொடையன் சைவ நாவாதி கலையுணர் பெரிய
சாமியே. உ

தில்லைமாநகம் சிவானந்த நிலைய மடாலயத்திற் குரிய

## ஆனந்த சண்முகசரணாலயசுவாமிகள்.

அருளியவை.

திருவினைந்நகர் சிவப்பிர காசமெனக் கவர்ந்துத்
தருவினைன்றவித் தகாமருண் மெய்கண்ட தலைவ
னுருவினுறவளி யொளியொளி புகவிடு நாட்கம்
மருவினைநாதன் மணிமெனு மாலைசொற் றனனால். க

கரிய சாமியுங் காணுதற் கரியதற் பதமெய்த்
தெரிய சாமியின் றிருவடித் துணையகம் புனைதற்
குரிய சாமிபோன் ஞானத்தே கோரியம் பதியிற்
பெரிய சாமியோர் பெரியநட் பேற்றநா வலனே. உ

மைகண்ட சேடனும் பாரதி கேள்வனும் பரிகின்ற
மைகண்ட ஏர்க்குதன் மாமரு வாவிந்த மாநிலத்தில்
மெய்கண்ட தேசிகன் மெய்ம்மணி மாலை விளம்பலுற்றான்
கைகண்ட முக்கனி போலியர் சீரியுங் கைக்கிடவே. ௩

ஞானசித்திப் பத்திராதிபருஞ் சைவபாசாசகநாமாகிய
யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வித்வான்

## சி. தாமோதரம்பிள்ளையவர்கள்,

இயற்றியவை.

பூமேவு சிறக்கவனும் பொறிமேவு நிறக்கவனும்
போற்றிவென்றாங், காமேவுந் திருவுறங்கை மைவ

ணை நாதரிடந் தாங்கு மம்மைத், தேமேவு மன்பன
ருட் சைவநூற் றுறைபலநாந் தெரிக்கத் தேர்ந்தோன்,
நாமேவு கலைவாணி யருடபுதல்வனை தெருட்புலவர்
நயக்கும் மன்னன்

மெய்கண்ட கொண்டலென வெந்நாளுங் கொடுத்
துதவும் பெரிய சாமி, பொய்கண்ட வறமூவர் புறப்
பொழிய வோரறிவர் போற்ற வோங்குஞ், செய்கண்ட
வெச்சிலிள மர்ப்பதியில் வாழுமெங்க டேவனை,
மெய்கண்ட குரவனருண் மணிமாலை யொன்றுசொற்றான்
விளங்க மாதோ.

சித்தாந்தசரபம் அஷ்டாவதானம்.

## பூவை கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியவை

கங்கையினுஞ் சிறந்தகொள் ளிடக்கரையி னெச்சி
யப்போர் கவினுற் றோங்குங், காசுறு பெச்சிலிள மர்
ப்பதிம டாலயத்திற் கருணை வாய்ந்த, வெங்கள்குரு,
மெய்கண்ட பணியின்சீ ரெவ்வெவரு மேத்தி டற்கே,
வெழிற்றவசி காமணிநற் செந்தமிழ்சி காமணிபல
லிய லினாவும், மங்குறவை யெழிலுறையூ வருபெரிய
சாமிநா வலர்கோ மான்றன். மகிமையுறு சுத்தாத்து
விதப்பொருள்க ளாங்காங்கு மமைந்து தோன்ற, தங்
கியசொன் னயம்பொலியு நான்மணிமா லைப்பனுவற்

றகவாச் சொற்றான், தக்கமே தாவியாக ணனிவியந்து
கொண்டாடிச் சாற்ற மாதோ.

இன்னநா லிற்சைவ மணங்கமழ்வ தனைநோக்கி
யிவாபா னனும, மன்னியவை திகசைவ சித்தாந்த
நாலுணர்ந்த மதிமிக் கோனுங், கன்னல்விளை பூவாளு
ரமிர்தவிற பனவறிஞன் கனிவி னோடும், நன்னயவச்
சினிலைற்றித் தமிழ்நாடு துதிகலிக்க நல்கி னனல்.

திருப்புத்தூர்ப்புராணம, திருவுசாததானமென்னும,
சூதவனபுராணமுதலிய பன்னூலாசிரியராகிய

**கரைக்குடி சொக்கலிங்கசெட்டியாரவர்கள்**

இயற்றியவை.

பொன்னிறத்துக் கார்வணன்கட் போந்தவிரு சத்
திமார் புகழ்வ லத்தாங், தன்னிடத்து முறாமிளைய
சாமிக்கு மொருபெரிய சாமி யாய, முன்னிபத்தொண்
முகப்பொல்லா முதுகுரவர் சிவாகமங்கண் முழுதுந்
தேற்றச், சின்மயகுதுள் ளொளிவிளக்கித் திருவெண்
ணைய யமர்ந்தருண்மெய் கண்ட தேவன

அன்னதனி வெண்ணெய்நக ரருட்கொலுவீற் றிரு
தருளு மதனைப் போல, இன்னிலஞ்செய் பெருந்த
வத்தா லெச்சிலிள மர்ப்பதியி லெழுந்து நாளும், உன்
னரிய திருக்கோல முழுவலன்பர்க் களிதருளி
யொளிரு மேன்மை, பன்னரிது பிறராலென் றொரு
கோட்டு மாதங்கப் பரம னனை.

பெரிய சாமிதன தொண்பெயர்கொ ளொருபு

ணிதனகத்துண்ணன்ற, செப்பரிய மெய்கண்ட சிவ குருசிகாமணியின் றெய்வவாய்மை, எப்பெரிய வருஞ்சிரங்கொண் டின்புறநான் மணிமாலை யெனுநூலோங்க, ஒப்பரிதா யருளினனே னுதன்பெருமை மற்றினியா ருரைக்க வல்லார்.

ஷை. அவதானியார் மாணாக்கர் வண்ணக்களஞ்சியம்

## காஞ்சி. நாகலிங்கமுதலியாரவர்கள்

இயற்றியது.

அத்துவித மெய்கண்ட பாலகுரு மணிமாட்சி யகிலத் தோங்க, சுத்தசைவ திகசைவ சித்தாந்த வுண்மையெலாந துலங்கி நிற்கும், மெத்தியநான் மணிமாலை சொற்றிட்டான் செந்தமிழின் மேன்மை தேர்ந்த, புத்திமா னுறையூர்நற் பெரியசா மிப்பெயர்கொள் புலவரேறே.

மகாவித்வசிரோமணி சதாவதானம் ஸ்ரீமத்

நா. கதிரைவேற் பிள்ளையவர்கள் பிரதமமாணாக்கரும்

சென்னை வேதாகமோக்த சைவசித்தாந்த சபையின்

கௌரவ காரியதரிசியுமாகிய புரசை

## மு. பாலசுந்தரநாயகரவர்கள்.

இயற்றியவை.

கலைவலா ருள்ளக் கனிவொடு நவிலுங் காவிரி யுபநதி யென்னுங், குலையவிர் சோலைக் கொள்ளிடக் கரையிற் குலவுநொச் சியமெனக் கூறும், தலையுறும்

12879

மெச்சி விளமர்நற் பதியிற் றழைபெருங் கோயிலி னுளும், நிலைபெற விளங்கு மெங்குரு மணியி னிலை மையா ருரைத்திட வல்லார்.

அத்தகை யண்ண லாயமெய கண்ட தேவனா ரடி மல ரென்றும், பத்தியா லேற்றிப் பாருள வலவர் பண் புடன் காணவிஞ் ஞான்றா, உத்தமச் செய்யு ளுருப்பு கண் மிளிர வொருபெரு நான்மணி மாலை, வித்தக போங்க விளம்பின னன்கு மேதினி வியந்திட வமயா.

அன்னவன யாவ னென்றரை வாருக் கவனியி லாருறை யூரில், முன்னவன் சீர்த்தி தனைமற வாத தேவரா யப்பிள்ளை மொய்ம்பின், துன்னிசெய் தவத் தான மகவெனத் தோன்றிச் சொல்லருங் கலைபல தேர்ந்தே, மன்னுபே ரன்பு கொண்டநம் பெரிய சாமி யாம் புலவர்கோ மானே

மகாவித்வான்ஸ்ரீமத் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள்
மாணாக்கரி லொருவரும் எச்சிலிளமர்
மெய்கண்ட தேவாதீன வித்வானுமாகிய

## பாலகுருகவிராயரவர்கள்

இயற்றியவை.

எங்குரவற் கினியனுறை யூர்ப்பெரிய சாமிவள்ள லிளமர் மேவு, நங்குரவன் மெய்கண்ட முனிவனான் மணிமாலை நவின்றா னென்ற, பொங்குபெரு மகிழ்ச்சி யினா னுமதனைக் கைக்கொணடே போற்றிப் போற்றிக்,

கஙகுலபக லறவெழுந்த வின்புருவ மடைவமிங்கு
கணாங்கொளீமே

புத்தமுதம் போலினிக்குஞ் சிவஞான போதமுனம் புகன்ற வெம்மா, னித்தமிழி னுளமகிழ்வ னெனவுரைத்தல் வியப்பன்றே விரத்தி ருதி, யுத்தமருங் கொளுவரன்றே வெனதுபிள்ளைத் தமிழினையு முவந்துகொண்ட, வத்தனவ னெத்தமிழ்க் கன்புசெயான் முத்தமிழுக் கரசே யனன்றே. ௨

மதுரைத்தமிழ்ச்சங்க வித்வானும் திரிசிரபுரம் எஸ். பி. ஜி. காலேஜ் தமிழ்த்தலைமைப் பண்டிதரும் ஆகிய

## ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்.

இயற்றியது.

அகவையொரு மூன்றதனிற் சிவஞான போதநூ லகில முய்யத், தகவுடனே யருள்பெருமா னெச்சிலின மர்ப்பதியிற் சாரும் நங்கள், பகலனைய மெய்கண்ட சற்குருநாத மணிமாலை பரிவிற் சொற்றான் புகழ்பொருண்மிக் குடையனுறை யூர்ப்பெரிய சாமி யெனும் புலவரேறே.



ஸ்ரீ மெய்கண்டதேவர்

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ ஞானசம்பந்த குருப்யோ நம:—

# ஸ்ரீ மெய்கண்டதேவர் வைபவசங்கிரகம்.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்.

திருவெண்காட்டுத் தேவாரம்

திருச்சிற்றம்பலம்.

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டு முருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டு மிசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி லுறைவானும் விடைகாட்டுங் கொடி
யானே

சைவசமயாசாரியார் நால்வருள் ஆளுடைய அரசும் ஆளுடைய நம்பியும் திருவவதாரஞ்செய்தருளிய மகா மகிமைதங்கிய நடுநாட்டினகணை திருத்தூங்கானைமாட மெனத் திருநாவுக்கரசு நாயனார் தமது தேவாரத் திருப்பதிகத்துட் கூறியருளிய திருப்பெண்ணாகட க்ஷேத்திரத்திலே குருலிங்க சங்கம பத்தியிற் சிறந்த அச்சுதகளப்பாளரென்னும் ஒரு வேளாளகுலதிலகர் நெடுங்காலம் பிள்ளைப்பேறின்மையால் வருந்தித் தமது குலாசாரியாருக்கு விண்ணப்பஞ்செய்ய அவர்

பெரிதும் ஆராய்ந்து திருநெறித்தமிழ் வேதமாகிய தேவாரத் திருவருட்பாத் திருமுறையிற் கயிறுசாத்திப் பார்த்தருளினார். அங்ஙனம் பார்க்கவே திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்தருளிய "கண்காட்டு நுதலானும்" என்னும் முதற்றிருக்குறிப்புடைய திருவெண்காட்டுத் திருப்பதிகத்திலே இரண்டாந்திருப்பாசுரமாகிய

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே

என்னுந் திருப்பாடல் உதயமாகப் பெரிதுமுவந்து அதன் செம்பொருளை அச்சுதர்களப்பாளருக்கு விளக்கியருளினார்.

அதன் பின்பு அச்சுதர்களப்பாளர் திருவருளை வியந்து ஆசிரியப் பெருந்தகையாரிடத்தே விடைகொண்டு தமது கற்பிற்சிறந்த மனைவியாரோடு சுவேதாரணியமென்னும் திருவெண்காட்டுத் திருப்பதியையடைந்து அங்குள்ள சோமசூரியாக்கினி யென்னும் முக்குளத்தீர்த்தத்திலே விதிப்படி மூழ்கி சுவேதாரணியேசுரரையும் பிரமவித்தியா நாயகியாரையும் தரிசித்து வழிபடுவாராயினர் அங்ஙனம் வழிபடும் நாளிலே ஒருநாள் சுவேதாரணியேசுரர் அச்

சுதர்களப்பாளருக்குச் சொப்பனத்திலே தோன்றி "மைந்தநீ கவலையொழி நினக்கு இத்தமிழுலகமுய்யுமவண்ணம் நமது திருக்குமாரனாகிய திருஞானசம்பந்தனென்னவே யாவருங்கருதும்படி திராவிட வேதச் செம்பொருளைத் தன்னகத்தடக்கிய சைவசித்தாந்த சாஸ்திரத்தை யருளிச்செய்து சைவ ஸ்தாபனஞ் செய்யத்தக்க ஒருபுதல்வனைத் தருகின்றோம் அவன் சந்தானாசாரியத் தலைமை யெய்திச் சிறந்துவிளங்குவன்" எனத்திருவாய்மலர்ந்தருளித் தம்முருக்கரந்த

உடனே விழித்தெழுந்த அச்சுத்தர்களப்பாளர் பெருமகிழ்ச்சிகொண்டு தமது மனைவியாருக்குத் தெரிவித்து இருவரும் முன்போலவே வழிபட்டுவரும் நாளில் நல்கைபதினத்திலே பரசமயத்தருக்கு நீங்கவும் சுத்தாத்துவித சைவசித்தாந்த ரகசியம் உலகமெங்கணுமோங்கவும் பன்னாடுகளிலுந் தென்னாடே சிறக்கவும் ஒருதிருக்குமாரர் திருவவதாரஞ் செய்தருளினர் அதுகண்ட தந்தையார் ஆராமகிழ்ச்சியோடு மகப்பேறு விழவுகொண்டாடி தமது குலாச்சாரப்படி சாதகருமம் முதலிய சடங்குகளைச் சிவாகமத்தில் விதித்தவாறே முடிப்பித்து உரியபருவத்திலே சுவேதவனப் பெருமாள் என்னும் பிள்ளைத் திருநாமம் தரித்துவழங்கிவருவாராயினர்.

இங்ஙனமாக சுவேதவனப் பெருமாள் பிறைமதி போல வளர்ந்து வருநாளிலே திருவெண்ணெய் நல்லூரின்கண் வசித்தருளும் அவர் தாயுடன் பிறந்தாராகிய காங்கேயபூபதி வேணவாவோடு அவரைத் தமது இல்லத்திற்கு எடுத்துக்கொண்டு சென்று பேரன்போடு வளர்க்க வளர்ந்து இரண்டுவயதிற்றானே அத்திருவெண்ணெய் நல்லூர் ஆலயத்தின்கண் எழுந்தருளிய மூத்த நாயனாராகிய பொல்லாப் பிள்ளையார் பின் விளைவறிந்து வேதாகமாதிக்கலைகளைப் பயிற்றிவர மெய்யுணர் வினரா யெழுந்தருளியிருந்தன

இப்படி நிகழும் நாளிலே திருக்கயிலாய மலையிமேல் அருட்கல்லால நீழலிலே படிகரூபமும் திருநேத்திரமும் உருத்திராக்ஷவடம் சின் முத்திரை அமுதகும்பம் சிவஞானபோத மிவைதரித்த சதுர்ப்புயங்களும் கொண்டெழுந்தருளிய முதற்குரவரான தக்ஷிணாபிமுக மூர்த்தியை முன்னொருகாலத்திலே தொழுதுமுன்னின்ற நந்திபெம்பெருமானுக்கு சிவ. பெருமான் திருவருள் சுரந்து தமது திருக்கரத்திலமைந்துள்ள சர்வாகமமகண்மையாகிய காம் ரௌரவாகமத்திலே எழுபத்து மூன்றாவதாகிய பாசமோசனப்படலத்துள்ளே அநுட்டுப்புச்சந்தசாக விளங்குவதுமாகிய பன்னிருசூத்திரத்தால் பொலியும் "சிவஞானபோதம் மென்னும் நூலை செவியறிவுறுத்தருளினார். நந்தி பெருமானும்' அதுகேட்டதுணையானே

எல்லா ஐயமும் நீங்கி மெய்ப்பொருள் தெளிந்து பின்னர் அதனைத் தம்மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த சனற்குமாரமுனிகட்குச் செவியறிவுறுத்தருளினார் அவர் தம்மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த சத்திய ஞானதரிசினிகளுக்குச் செவியறிவுறுத்தருளினார் அவர் தம்மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த பரஞ்சோதி மாமுனிவருக்குச் செவியறிவுறுத்தருளினார்

அப்பரஞ்சோதி மாமுனிவர் தென்மலயத்தமருங் குறுமுனிவரைக் காணுமாறு திருக்கயிலையை நீங்கி காசி முதலிய க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு ஆகாய கமன மார்க்கமாகச் செல்லுங்கால் திருவெண்ணெய்நல்லூரை அணுகலும் இவருக்குக் கமன சித்தித் தடைப்பட்டது; தடைப்படலும் ஈண்டு ஓர் அதிசயமிருப்ப தென்னையெனக் கீழிறங்கி நோக்குவாராயினர் நோக்குங்கால் அங்கே மணலிற்றிருக்கோயி லமைக்தச் சிவலிங்கந்தாபித்துப் பூசை செய்து திருவிளையாடயரும் ஐந்து வயதுள்ள சுவேதவனப்பெருமாளைக் கண்டு வியந்து தமது ஞானதிருஷ்டியால் திருவருளை நோக்கிப் பார்க்குமளவில் சிவபெருமானார் திருவுள்ளக்குறிப்பை யுணர்ந்து அம்மெய்யன்புடைய சாமுசித்தருக்குத் திருவருணோக்கம் பாலித்து “மெய்கண்டதேவர்” எனத் தீக்ஷாபிதானமளித்துத் தமது குருமரபில் வரும்

"சிவஞானபோதத்தை" உபதேசஞ் செய்தருளி இதனை இவ்வுலகிலுள்ளார் உய்யும்வண்ணம் தமிழில மொழிபெயர்த்து வார்த்திகப்பொழிப்புரையும் செய்வாயாக என்று திருவாய் மலர்ந்தருளிச் செல்வாராயினார்.

பின்னர் அங்ஙனங் கேட்டருளிய அப்பழவுருவப் பெருந்தகையார் தமது வரவை யோர்ந்து ஆசிரியர் பணித்தவாறே அச் "சிவஞானபோதத்தை" மொழிபெயர்த்து வார்த்திகப் பொழிப்புரையுஞ்செய்தருளி அதனைத் தம் மாணாக்கர் நாற்பத்தொன்பதின்மருக்குஞ் செவியறிவுறுத்தருளினா அவரிற்றலைமை வாய்ந்தவரும் திருத்துறையூரில் ஆதி சைவர் குலத்தில் திருவவதாரஞ் செய்தருளியவரும் சகலாகம பண்டிதரென்னுங் காரணப்பெயர் வாய்ந்தவருமாகிய அருணந்திசிவாசாரியார் அதனைத் தம்மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்தவரும் திருக்கடந்தை என்னும திருமருதூரில் சாமவேதியர் மரபிலே பராசரமகாரிஷி கோத்திரத்திலே திருவவதாரஞ்செய்தருளியவருமாகிய மறைஞானசம்பந்த நாயனாருக்குச் செவியறிவுறுத்தருளினார், அதனை அவர் தம்மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்தவரும் விராட் புருடனுக்கு இருதயத்தலமாகிய சிதம்பர க்ஷேத்திரத்தில் தில்லைவாழந்தணரில் ஒருவராய்த் திருவவதாரஞ்

செய்தருளியவருமாகிய உமாபதி சிவாசாரியாருக்குச் செவியறிவுறுத்தருளினர். மெய்கண்ட தேவராதிய இந்நால்வரும் சந்தானசாரியர் என அடிப்பட்ட சான்றோரால் வழங்கப்பெற்று வழிபாடுநடை பெற்று வருகின்றது. இந்நால்வரும் இவ்வுலகின் கண் ஆங்காங்கு நடாத்தியருளிய அற்புதத் திருவிளையாடல்களுக்களவில்லை. அவற்றை ஈண்டு விரிப்பிற் பெருகும். இவற்றை நன்குணர விரும்புவோர் மெய்கண்ட விஜயம் மெய்கண்ட வைபவதீபிகை உமாபதிசிவதிக்விஜயம் முதலிய வடமொழி கிரந்தங்களிலும் நந்திமரபட்டவணை மெய்கண்ட தேவலீலை சந்தானசாரியார் புராணம் சந்தான குரவர் புராணசங்கிரகம் சூதவனபுராணம் முதலிய தென்மொழி நூல்களிலும் கண்டுணர்வாராக.

தண்பொழில்சூழ் சண்பையர்கோன் றமிழ் ஞானசம்பந்தன், விண்பொலிவெண் பிறைச்சென்னி விகிர்தனுறை வெண்காட்டைப், பண்பொலிசெந் தமிழ்மாலை பாடியபத் திவைவல்லார், மண்பொலிய வாழ்ந்தவர்போய் வான்பொலிப் புகுவாரே.

திருச்சிற்றம்பலம்.

### சந்தான குரவர் நால்வரின் திருநக்ஷத்திரம்.

சித்திரை யத்தமுமாபதியாவணித் திங்கடனி, லுத்
திரஞ் சீர்கொண் மறைஞான சம்பந்தரோதுகன்னிச்,
சுத்தமெய்ய பூர மருணந்தியைய பசிச் சோதிதனில்,
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே.

### சந்தான குரவர் திருக்கோயில் கொண்ட தலம்.

சீரார் திருவெண்ணெய் நல்லூரின் மெயகண்ட தேவனிந்தப், பாரார் திருக்கடாஞ் சேரியில ஞான சம்பந்தனணி, யூரார் திருத்துறை யூரருணந்தியுமா பதிநற, காரார் திருக்கொற் றவன் குடி கோயில் கலந்தனமே.

இந்நூல் உறையூர் சைவசித்தாந்த சபையிலும், பூவாளூர் சைவசித்தாந்த சங்கத்திலும், எச்சிலியர் மெய்கண்டதேவர் மடாலயத்திலும், சிதம்பரம் [illegible]லிங்க மூர்த்தி தேசிகர் மடத்திலும், கிடைக்கும்

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தகுருவேதுணை.

நொச்சியம் என்று வழங்கும்

தேவார வைப்புத் தலமாகிய

எச்சிலிளமர்ப்பதி.

# ஸ்ரீ மெய்கண்டதேவர்

# நான்மணிமாலை.

---

காப்பு.

ஸ்ரீ பொல்லாப்பிள்ளையார்

பூமேவு பொழில்சுலவு மெச்சிலிள மர்ப்பதியிற் பொருந்த வோங்குந், தேமேவு சித்தாந்தத் தினகரனை மெய்கண்ட சிவத்தின் செய்ய, தூமேவு மலரடிக்கு நான்மணிமா லிகையொன்று சூட்ட நாளு, மாமேவு மொருகோட்டுப் பொல்லாத பிள்ளைபத மனத்துட் கொள்வாம்.

## பாயிரம்.

### ஸ்ரீ பஞ்சவண்ணேசர்.

#### நடுவெழுத்தலங்காரம்.

விண்ணினபேர் தூலப்பேர் வெறியின்பேர் கடிப்பேர் மெல்லியர்கா லணியின்பேர் சென்னியர்பேர் கட்பேர், நண்ணியவிவ் வேழ்மொழியி னடுவெழுத்துப் பேரார் நவிலுமற்றீ ரேழெழுத்தா னருமோரேழ் பேரில், எண்ணியவீ ரெப்பாளோ டிரண்டேறி வந்தே யிருமூன்றி லொன்றகற்றி யெனக்கெழின் மூன் றுருந், தண்ணியநான் கினையருளத் தன்னமுமைந் தில்லார் தாவில்புக ழுறையூரின் மேவுபரம் பொருளே.

### ஸ்ரீ காந்திமதி அம்மை

#### நடுவெழுத்தலங்காரம்.

மாலுமிவா னரமாற்றார் மாமைபுன் காவி வருமி வற்றி னடுவெழுத்தால் வயங்குதிருப்பேராள், ஏனு மற்றைத் தசவெழுத்தைம் பதத்திலிடை யாடி மிறைவர்பஞ்ச வண்ணருக்கே யிமையமெழி லேந்தாள், நாலுமொன்று மிரண்டுமுள நடுங்கிவெளி போட னிவென்று விளங்குகுழ னயனமுக முடையாள், சேலுகளுங் தடம்பணைசூழ் திருவுறையூ ருறையுந் தேவிசிவ காமியவள் சீர்பரவு மனமே.

### ஸ்ரீ நிருத்த விநாயகர்

திருத்தகுமா மறைமுடிவிற் றிகழ்தருசீர் மனுவாய,
அருத்தமிகு பிரணவத்திற் கரியபரம் பொருளான,
மருத்தபொழிற் றிருவுறந்தை மாநகரி லமருமருள்,
நிருத்தகய முகவள்ள னிறைகழற்று மனைதொழு
வாம்.

### ஸ்ரீ சுப்பிரமணியர்.

தமிழ்மொழி தனக்கோர் தனிப்பெருங் குருவாய்த்
தயங்குறு தகைமையி னுலுங், தமிழ்நலம் வேட்டுப்
புலவர்கள் பலர்பாற் றகத்தொடர்ந் திட்டமை
பானும், தமிழ்மலர் கொடுதன் சரண்மலர்ப் போற்
றுந் தமியனை விலக்கிடா தளிப்பான், தமிழ்மணங்
கமழுந் திருவுறை யூரிற் சார்சர வணபவ குகனே.

### ஸ்ரீ சமயாசாரியர் முதலினோர்கள்.

திருஞான சம்பந்தர் திருநாவுக்கரையர் திருநாவ
லூர்நம்பி திருவாத வூரர், மருவாரு மலர்த்தெரியற்
றிருச்சேஞ்ஞ லூரர் வயங்குமருண் மெய்கண்டார்
வளருமரு ணந்தி, குருவாரு மறைஞான சம்பந்தர்
கொற்றங் குடியார்மற் றிவர்க்குப்பின் குலவினர்கண்
மேலும், வருவாரென் றிவர்கண்மரு மலர்ப்பதங்க
ளுளு மறவாமல் வாழ்த்துகிற்பாம் பிறவாம லினியே.

பாயிரம் முற்றும்.

---

## நூல்

வெண்பா.

சீர்பூத்த தெய்வத் திருவிளமர் மேவியமர்
ஏர்பூத்த மெய்கண்ட வீசனை—கார்பூத்த
மும்மலத்தா லைந்துனது முன்னின்ற நாயேனைச்
செம்மலர்த்தா டோயவருள் செய். (௧)

கலித்துறை.

செல்லார் பொழிலிள மாப்பதி மேவிய தெள்ள முதை, வல்லார் பரவுறு மெய்கண்ட தேசிக மாமணியைப், பொல்லா ருளத்துட் புகுதாத சோதியைப் போற்றுமின்காள், சொல்லார் கடற்புவி யுள்ளீர் பர கதி தோய்வதற்கே. (௨)

விருத்தம்.

தோற்றமு மீறு முள்ளதன பாலே கிடத்தலி னென்றனீ சொற்றத், தேற்றமாம் மொழியின் செம் பொரு ளுணராச் சிதடர்தாந் தோற்றமீ றில்லா, ஆற்றலார் கடவு ளின்றெகா லென்ன வாசங்கை நிகழ்த்திமாய்ந் துவரே, ஏற்றமா ரெச்சி லிளமர்நற் பதிவா ழிணையிலா மெய்கண்ட சிவமே. (௩

ஆசிரியப்பா

சிவமே முதலாச் செப்புமோ ராறும்
அநாதி யென்னத் தனதுமே ராருளால்

ஆரண முதலா மோரண வழியால்
எம்மை நந் தேற்றிய செம்மையார் செம்மல்
ரு: எச்சி லிளமர் மெச்சுறு பதியான்
பொய்கண் டகன்ற மெய்கண்ட நாதன்
அவனிரு சரண்டொழு தடியோம்
பவமெனும் வனபகை மாற்றுவ மின்னே. (ச)

வெண்பா.

இன்றே யிரிந்த விருண்மலங்கண் மூன்றும்
அன்றே தொடர்ந்தசெய லற்றதே—நன்றேசார்
எச்சிலிள மாப்பதியி லேப்மெய்கண் டானடியை
உச்சியிற்கொண் டேத்த வுவந்து (ரு)

கலித்துறை-

உவப்போ டுனதுயர் சித்தாந்த சைவத் தொழுக லின்றி, அவப்போ திமைக்கு மடியேற் கிரங்கி யருள் கிலையேற், பவப்போ ரொழிந்துன் பதமல ரெய்தலிப் பாவியென்றோ, தவப்பே றெனுமிள மர்ப்பதி சத்ய தரிசனியே. (சா)

விருத்தம்.

சரியைகிரி யாயோக ஞானமென நாளுஞ் சாற்று
சதுர்ப் பாதமவை தகவேவொவ் வொன்றும், விரியும்
வகை நந்நான்காய்ப் பதினாறென் றாகு மெய்ந்
நெறியை நன்குணர்ந்த மேலோர்க ளெல்லாம், உரிய

நின தொண்சமுக முற்றுபணி யாற்றி ஒப்பரிய பர போக முறுவரிழி நாயேன், றிரியவல னலதுபணி செய்தறியே னெனையா டிகழெச்சி லிளமரயர் திரு மெய்கண் டவனே. (எ)

ஆசிரியப்பா.

கண்டதே காட்சி கொண்டதே கோலம்
உண்டதே போக மண்டலத் தன்றி
பின்னைநா ளுறுசதி யென்றொன் றுளதோ
என்றிறு மாக்கும் புன்றொழிற் சிலவர்
குழுவிற் சாரா தொழுகுறப் பணித்தும்
தத்துவ நியதி தாமே களைந்தே
ஒத்தவந் நிலையி லுறுமுயிர் தானே
பிரமமா மென்னச் சிரமமோ டோதும்
மாயா வாதப் பேயோர் தம்பால்
கட்புலந் தானும் பெட்பொடு படரா
விதமே யெனது மிதமென் றுரைத்தும்
காலமே தெய்வங் கருமமே கருத்தாச்
சத்தமே யிணையில் வத்தெனக் கிளந்து
நாத்திகம் பேசி வாய்த்தழும் பேறியுந்
திரிவோ ருறவை மருவா தளித்தும்
கடல்கடை ஞான்று படர்தர வெழுந்த
ஆலவி டங்கண் டோலமென் றோடி
அருந்ததி யனைய பிருந்தையைப் பெட்டுக்
சரவொழுக் காக விரவிட வணையாள்

அக்குறிப் போர்ந்தே சிக்கெனத் தானே
பழிப்புறு மிவ்வுட லொழிக்குவ லென்று
தீயினை வளர்த்தி மாய்குறக் கண்ட
அத்தேத் துளமிகப் பித்தே றினளாய்ச்
சாம்பரில் வீழ்ந்து தேம்பித் திரிந்தே
தசமுகன் றனைய னிசைவுடன் வாளால்
மாயச் சனகியை யேயவே வெட்டப்
பார்த்து வெரீஇ வேர்த்தழு திரங்கி
இன்னும் பலவாப் பன்னுந் துயரொடு
பலப்பல பிறவி கலப்புற நாளும்
கொண்டே யுழிதரு விண்டே பரமென
ஐந்திரு ணூல்வழி வந்தோர் வீழும்
படுகுழி வீழாத் திடவறி வீந்துய்
இன்னோ ரன்ன புன்னெறி மாக்கள்
பின்னெவ ருளரோ வன்னவர் தங்கள்
முன்னரு நில்லா முதன்மை நல்கி
தானே வந்து தடுத்தாட் கொண்டு
சைவசித் தாந்த மெய்ந்நெறி வழங்கி
ஆனா வின்பத் தரும்பெறல் வாழ்விற்
செம்மாந் திருக்குந் திருவமின் றளித்தான்
பொல்லா ரருணெறி கல்லா வெற்கும்
நொச்சியம் பதியின் பூச்சகம் பரவ
மெய்கண்ட நாம மேவுங்
கைகண்ட வின்பக் கருணையங் கடலே. (அ)

MAHAMAHODADHVAYA

வெண்பா

கற்ற வறிவாலே காசினியி னின்னருளைப்
பெற்றவரைப் போலே பிதற்றுவேற்—குற்ற
இளமர்ப் பதிவாழு மெந்தையே மெய்கண்டா
தெளிய விரங்கியருள் செய். (௯)

கலித்துறை.

செய்வான கருவி நிலஞ்செயல் காலநற் செய்பொருளோ, டெய்தா வருமிவை யாறு மொருவினை பேற்றுமென்பார், மெய்யா னுறப்புரி நினவினைக் கென்செயன் மேவக் கொண்டாய், மைபார் பொழிலிள மர்ப்பதி மெய்கண்ட மாதவனே. (௧௦)

விருத்தம்.

தவமே புரிந்து னடியேனு மன்பர் தமையே யடைந்து தமியேன், பவமே தவிர்ந்து பரபோக மாய பயனே திளைக்க வருள்வாய, அவமே திரிந்து தினமே கழித்து னடியேன் வருந்த லறமோ, நவமே பொருந்து மிளமர்ப் பதிக்க ணாவிலுண்மை கண்ட குருவே.

ஆசிரியப்பா.

குருவென வந்து குவலயந் தன்னில்
இருவினை நீக்கி யெனையரு கிருத்தி
முப்பொரு ளுண்மை மெய்ப்படக் கிளத்துவம்
வாட்டமொன் றின்றி கேட்டிநீ யென்று

சிவமே சீவன் சேரிருண் மலமே
மாயை யிரண்டென் றுயவோ ராறும்
அறுதியே யுளவென் றறைதுள மொப்ப
நன்றெடுத் தியம்பி மன்றமற் றவையுண்
முற்பொருள் யாமே புற்கல னீயே
மற்றவை நான்கு முற்றநெற் குமியும்
செம்பிற் களிம்பும் பம்பிய வாறே
நின்னிடை நீங்கா மன்னிருட் கட்டே

அவற்றுள்

சிவமா மெம்மியற் செப்புங் காலை
நித்திய நின்மல நிரஞ்சன நிராமய
நிர்க்குண நிச்சல நிர்விகா ரம்பரம்
சுத்தம் முதன்மை தொலைவில் வியாபகம்
ஏகஞ் சுதந்தர மின்பநிர் விடையம்
சத்துவ மகண்டிதந் தத்துவா தீதம்
ஆமிவை முதலாந் தோமறு மியல்பினம்

அதாஅன்று.

ஆன்ம விலக்கண மறையுங் காலை
யாந்திறஞ் சாரு மந்திற மேயாய்
விளங்குந் தூய பளிங்கு போல
எம்மைச் சாரி னெம்மியல் பேய்ந்தும்
மலத்தைச் சாரின் மலத்தியல் வாய்ந்தும்

நண்ணுஞ் சார்ந்ததன் வண்ணமே யாயும்
சத்தைச் சார்வுழி சத்தே யாயும்
அசத்தைச் சார்வுழி யசத்தே யாயும்
தயங்குந் திறனுற் சதசத் தாயும்
அறிவித் தன்றி யறியா தாயும்
யாமென் றுளமோ தாமன் றுளவாய்
எண்ணிறந் தனவாய் நண்ணுவியா பகமாய்
தனவய மிலவாய்த் தலைவனை யுளவாய்ச்
சிற்றறி வோடு சிறுதொழி லினவாய்
மலத்தடை யினவாய் வல்வினைக் கீடாய்ப்
பல்வே றுடலந் தொல்பே ருலகில்
எடுத்தெடுத் தெய்க்கு மியல்பின வாயும்
ஆயபல் லியலு மேயவான் மாவே

அவைதாம்

ஆணவ மொன்றே யமைவிஞ் ஞான
கலர்க ளென்னச் சிலருள ரவரே
அநாதியே யொருமல மமைந்தோ ரென்றும்
விஞ்ஞா னதி விளம்புமை வகையால்
ஏனைய விருமல மிரிந்தோ ரென்றும்
இருவகை யாக வியம்பப் படுமே

அதாஅன்று

ஆணவங் கன்ம மமையும் பிரளயா
கலர்க ளென்னச் சிலருள ரவரே

அநாதியே யிருமல மமைந்தோ ரென்றும்
பிரளயத் தான்மல பெந்தம் பெயர்ந்தே
இருமல முடையா ரென்று மென்றும்
இருவித மாக வியம்பப் படுமே

அதாஅன்று

ஆணவங் கன்ம மார்தரு மாயை
எனும்மும் மலங்களு மியற்கையி னுளராய்
சகல ரென்னத் தயங்குனர் பலரே

அதாஅன்று

பாச விலக்கணம் பகருங் காலை
ஆணவங் கன்ம மாயைமா யேயம்
திரோதை யென்னத் திகழுமை வகையாய்

அவற்றுள்

ஆணவ மேகமா யாருயிர் தோறும்
வெவ்வே றாகி விரகையுந் தொழிலையும்
மறைத்து நின்றே மருவிய தத்தங்
கால வெல்லையிற் கடக்கு மநேக
சத்திக ளுடைத்தாய்ச் சடமா கும்மே
கன்மமோ வவ்வணுக் கண்மனம் வாக்குக்
காயமென் றியம்ப வாயமூன் றானும்
இயற்றிய புண்ணிய மிருமபா வம்மே

இவைதாம்

எய்திய பிறப்பி லியற்றிய பொழுதில்

ஆகா மியமென் றடைபவந் தோறும
இங்ஙன மாக வீட்டப் பெற்றுப்
பக்குவ முறும்வரை பகர்மதி தத்துவம்
ஆதர வாக வமைமா யையிலே
கிடக்கும் பொழுது கிளர்சஞ் சிதமென
நிவற்றாள் பக்குவ மெய்திய வைதாம்
மேல்வரு முடலையு மெய்யது கொண்டு
துய்க்கப் பெறுஞ்சுக துன்பங் களையுந்
தந்துப யன்படு ததிபிரா ரத்தம்
என்றபி தான மேற்கு மென்ப

## இனியே

மாயையோ விந்து மோகினி மானே
எனமூ வகையா மிவைகளி னுள்ளே
முன்னவை யிரண்டு மொழியினித் திபமே
பின்னது பின்னதிற் பிறத்தலா லசித்தம்

## அவற்றுள்

சுத்தம்நித் தியமாய்த் துலங்குவியா பகமாய்
அருவமாய்ச் சடமா யான்றசொல் வடிவும்
சுத்தமா கியபொருள் வடிவுந் தோன்றற்
காதிகா ரணமா யலமரல் செயாதாய்
ஒருமல முடையார்க் குறுதநு முதலாய்
வயங்கு மசுத்த மாயையோ வென்னில்

நித்தம் வியாபக நிகழுரு வஞ்சடப
எனுநான் கியலோ டியம்பு பிரளயா
கலர்க்குத் தநுவொடு கரண புவன
போகஞ் சுத்தா சுத்தமாய்ப் பொருந்தி
மயக்குஞ் செய்வதாய் மருவுமென்ப
பகுதியின் பான்மை பகருங் காலை
விந்துமே லாகி விளங்கி யிருப்ப
தானதின் கீழாய்த் தணிந்த மோகினியின்
தூலமா கியபரி ணமம தாகி
மும்மலத் தினர்க்கே மொழிதநு கரண
புவனபோ கம்மாய்ப் பொருந்தி நாளும்
ஆன்ம வறிவோ டவாத் தொழி லிவற்றை
ஏகதே சத்தன வாக வியற்றி
மயக்கமே செய்யும் வைந்தவம் விந்தின்
காரிய மாகிக் கலந்திடு முயிரைத்
திரோதையா தென்னச் செப்புங் காலை
ஆணவங் கன்ம மார்தரு மாயை
எனும்மும் மலங்களை யிருந்தொழிற் படுத்தி
பாகம் வருத்தெம் பகரொரு சத்தியே
இவையே முப்பொரு ணவையி லிலக்கணம்

எனினும்

வண்ணான் புடவையின் மாசினைக்கூட்டி
முன்னுள மாசையு முடிப்பதே பொருவ

யாமே

காரண மதனுக் கிசைகா ரியமாய்
மாயை கன்ம மருவுறச் சேர்த்து
வன்மலப் பகையை மாற்றுவ னமக்கே

இதனால்

பக்குவ மெய்திய பான்மையோர் பலமே.

அதனால்

ஒருமல முடையார்க் குணர்விற் குணர்வாய்
இருமல முடையார்க் கீரிரு புயமும்
காள கண்டமுங் கண்ணுறு நுதலும்
உறுமோ ருருவோ டுற்றுநன் கருள்வோம்
மானைக் காட்டி மான்பிடிப் பதுபோல்
மூழ்குறும் போது மும்மலத் தார்க்கே
அருள்வான் வேண்டி யருளா லினைய
மானிட வடிவம் வகித்தீண் டெழுந்தனம்
என்று பலவா யெடுத்தெடுத் தியம்பி
கன்றிய மலநோய்க் கட்டகன் றெய்தும
ஒன்றி யொன்றா வுண்மையு முரைத்தே
புழுத்த நாயினும் புன்மைய னாய
கல்லா வறிவிற் கடைப்பட் டேனைத்
தன்னடி போற்றுந் தரத்தி னிறீஇ
இன்னருள் வழங்கி யென்று கொண்டனன்

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமரம் பாடும் பூமரச் சோலை
வளமெலாங் குலவு மிளமர்நற் பதியில்
ஓங்கொளி ஞானப் பிழம்பாய்
வயங்குமெய் கண்ட மாதவ நிதியே. (கஉ)

வெண்பா.

நிதியை நிலத்தைநன் னேரிமையை வேண்டு
மதியை யுடையார் மருவார்—கதியையெம்
நொச்சியம்வாழ் மெய்கண்டா னேன்றுட்குத்
உச்சிதரே யல்லா துவண்தொண்டுசெய்யும் (கங)

கலித்துறை.

உவலைச் சமயிக ளொவ்வா வுரைகொண் டுவரிவை ப்பிற், சவலைப் படுமனச் சங்கடந் தீர்த்துத் தமியனை யாள், திவளும் பொழிலிள மர்ப்பதி மெய்கண்ட தேவையல்லாற், கவலைக் கடற்புகு மெத்தேவரையுங் கருதிலனே. (கச)

விருத்தம்.

கருவேதனை யறவேயருள் கருணைப்பிர காச
உருவேயெனு மிளமர்ப்பதி யுண்மைத்தரி சனிபாங்
தருவேகுரு வவன்வாய்மலர் குலவுஞ்சிவ ஞான
மருவேமலர் நாலேயிணை மருவாவள நாலே. (கரு)

ஆசிரியப்பா.

நூல்பல தேர்ந்த நுண்புல முடைய
செந்தமிழ் மக்காள் செப்புவங் கேண்மோ
வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவ னாகிய முக்கண் மூர்த்தி
ஆதி நாளி லருளிய முதனூல்
இருக்கு யெசுரு சாம மதர்வம்
என்றெடுத் தியம்பு மீரிரு மறையுங்
காமிகம் யோகஜஞ் சிந்தியங் காரணம்
அசிதந் தீப்தஞ் சூக்குமஞ் சகச்சிரம்
அஞ்சுமான் சுப்பிர பேதம் விசயம்
நிச்சுவா சஞ்சுவா யம்புவ மாக்கி
னேயம் வீரம் ரௌரவ மகுடம்
விமலஞ் சந்திர ஞான முகவிம்
பம்புரோற் கீதம் லளிதஞ் சிததம்
சந்தா னஞ்சர் வோத்தம் பார
மேச்சுரங் கிரணம் வாதுள மென்ன
நாலே ழாக நவிலா கமமும்
எனவிரு வகையா யிலகு மென்ப

அவற்றுள்

உண்மைப் பொருளை யொரேவழி யுணர்த்தா
தவரவர் பக்குவத் தளவிற் கேற்ப
பலதே வரையும் பாற்பட வகுத்தே

கருமகாண்டங் களுளுஞ் ஞான
காண்ட மென்ன வீண்டிரு வகையாய்
விளங்குந் திறனால் வேதம் பொதுவாய்
புவியோர்க் குரிய பூருவ மாமே

அதனால்

ஒன்றே பதியவ் வொன்றுஞ் சிவமே
என்றெடுத் தியம்பி யெண்ணி லாருயிர்கள்
அப்பொரு ளெய்துபு வரும்பெறல் வாழ்வில்
தலைப்படு நெறியாஞ் சரியை கிரியா
யோக ஞான வொழுக்கங் களையும்
இன்றி யமையா வேனைய பிறவும்
செப்புந் திறனாற் சிவாகமஞ் சிறப்பாய்
சத்தினி பாதத் துத்தமர்க் குரிய
சித்தாந்த மாகித் திகழ்ந்ததை யன்றே
அங்ஙன மாய வவ்வா கமமும்
வடமொழி நன்கு வல்லார்க் கன்றி
ஏனை யோருக் கெட்டுணை யேனும்
பயப்பா டிலவாம் பான்மை யோர்க்கே
முப்பொரு ளுண்மை முறைபெற வகுத்துக்
கரதலா மலகங் கடுப்பக் காட்டித்
திடமுறு மொழியாந் திராவிட மொழியில்
நாற்பா னெறியின் மேற்பா லவற்கே
செவ்விதி னொருநூற் றிகழ்தர வளித்தான்

அது தான்

தன்பெய ரொருகாற் றுளுறச் சாற்றினும்
வன்பவப் பகையை மாற்று மருந்தாம்
சிவஞான போதமென் றெய்வத நூலே

இனியே

அந்நூ லருளிய வருட்பெருங் கொண்மூ
ஆர்கொ லென்னி லடியே முய்யப்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ப் பதிதான்
கைதவ மிலாது செய்தவப் பயனென்
முந்நூன் மொழிந்த முழுமுதற் பொருளே
இந்நூற் பொருட்டா யிருகண் மூர்த்தியாய்
திருவவ தாரஞ் செய்தருள் செம்மல்
மெய்கண்ட நாம மேவுசிந் தாமணி
கற்றவ ருண்ணுங் கற்பக நறுங்கனி
மற்றவ ரறியா மாணிக்க மாமலை
எளியே னுளமு மிளமர்ப் பதியும்
ஒருவா துறையு மொப்பிலாச் சுடரே

ஆதலின்,

ஞான காண்ட நன்னூ லாய
சாத்திர மதனைத் தமியே முணர்ந்து
எங்ஙனம் வீடுபே றெய்துவ மென்ன
உறுபெருங் கவலை யொழிமி னொழிமின்

அன்னூற் சிரமிசை யமைவிற் றங்கி
இன்னே னமரு மிருந்தளி சூழ்ந்து
கூடு. திருமுன் னின்று செங்கை கூப்பி
ஆனா வழுதே வருவே வுருவே
ஞானா கரனே நன்றே வொன்றே
ஊனே வுயிரே வுணர்வே வுளமே
தேனே பாகே திருவே குருவே
௭0. கண்ணே மணியே கதியே நிதியே
என்றெடுத் தேத்தி யிருகணீர் வார
நெஞ்சநெக் குருகி நிற்பீ ராகில்
மலபரி பாகம் வாய்ப்ப
எண்ணிய வெண்ணியாங் கெய்துவிர் நன்கே. ()

வெண்பா.

நகர மகர நலிய வகரம்
யகர மெனுமெளியே னெய்திச்-சிகரம்
எனவிளமர் மேவ வின்பார்மெய் கண்ட
தினகரனே நன்கருளிச் செய். (கஎ)

கலித்துறை.

செய்யா வினைகளை யேசெக மீதினிற் செய்து மன, நையா வுழன்றது போதுமென் றேயின்று னற்சமுகம், உய்வா னனியுளங் கொண்டடுத் தேனினி யுன்னருளே, மொய்வாய் மலர்த்தட நொச்சிய மெய்கண்ட முன்னவனே. கஅ

### விருத்தம்.

முற்பலப்பல வுற்பவத்து முயன்றுநற்றவ முற்றிய
மோனஞான வரோதயப்பர முத்தராமவ ரன்றியே,
புற்புதம்பொரு முடலைபேணிலை யென்றுபொய்ப்பொ
ருள் செய்துவெம் பூவையார்வய மாகிவீண்படு புன்
மையாளருக கொல்லுமோ, கற்பகப்பொழிற் கண்டு
மண்டிவை கமழ்செழுங்கனி னுக்கொருக் கானுமொவ்
வில மொவ்விலம் மெனக் கருதிவான்மறை யத்திகழ்,
அற்புதப்பல சோலைசூழ்தரு மணிகொணைச்சிய நச்
சிய வமலரூபமெய் கண்டதேசிக ஞன்றநூற்பொருள்
காணவே. (கக)

### ஆசிரியப்பா.

காடும் மலையுங் கனலும் புனலும்
தேடி யோடித் தெறுபசிக் குடைந்து
காயுங் கனியுங் காற்றுஞ் சருகும்
அருந்திப் பன்னா ளருந்தவங் கிடந்தே
என்பெழும் யாக்கைய ராகி யென்னே
வாணாள் கழிப்பீர் வீணே முனிவீர்
தாமாந் தன்மை சார்ந்தார்க் கருளும்
ஓமாம் புலியூ ரொண்பதி தோன்றி
சரியை கிரியைத் தனிநிலை தேர்ந்தே
எண்வகை யோகப் பண்பது முற்றி
அம்மைகுண் டலியாற் செம்மைநல் லமிர்தம்

உண்டுண் டுறங்கா வுலப்பிலா னந்தச்
சண்முக முனிவன் றருதவச் சுதனாய்
வருமொரு பெரியோன் மறைசை நகரெழு
தாயும் மான தயாபர மூர்த்தி
வழிவரு தூய மாசிவ வேதியன்
அவராஜ யோக வவல மகற்றும்
சிவராஜ யோகத் தேசிகர் மாமணி
பொய்கண்ட ஞானப் புன்மை தவிர்க்கும்
திருமெய் கண்ட சிவாசா ரியன்றன்
செங்கம லப்போ தங்கழற் பாதப்
பற்றே பற்றுப் பற்றி யுய்ந்தோன்
வடமொழி தென்மொழி மருவும் மகோததி
சுத்தாத் துவிதச் சித்தாந் தச்சுடர்
சிவப்பிர காசத் தெள்ளமி தானம்
கொண்டொளிர் கோமான் குணங்கெழு தனது
பன்மா ணவரொடு நன்மா மலர்கொடுத்
தூய்த் தொழு தேத்துந் தேத்துளிப் பொதும்பர்
காவிரி நதியின் கரைமருங் கொளிரும்
இளமர் வளநக ரெய்தி யாங்கண்
திப்பியம் பொலியுஞ் சினகரத் தமர்ந்த
ஒப்பிலாத் தூய வொள்ளொளிப் பிழம்பை
மெய்கண்ட தேவ வித்தகப் பொருளைக்
குடந்தம் பட்டுக் குழைந்தினி தேத்தில்

கூ௫. ஐயுற வில்லா தன்னே
எப்பதம் வேண்டினு மெய்துதன் மெய்யே. (உ0)

வெண்பா.

மெய்கண்ட தேவை விழுப்பொருளை வித்தகனைக்
கைகண்ட வின்பக் கனியினை—உய்கொண்ட
சித்தாந்த நன்னிலையைச் சேனார் பொழிலிளமர்
கத்தாவைக் காண்பதுவே கண். (உக)

கலித்துறை.

கண்ணு ரொளியின் கதிரொளி யோடு கலப்பது
போல், தண்ணு ருனதருட் டாரக மோடு தகக்கலந்
துப், புண்ணு ருளத்த னிரண்டறக் கூடிப் பொலி
வதென்றோ, எண்ணுன் கறம்பயி னெச்சிய மெய்
கண்ட வெம்மிறையே. (உஉ)

விருத்தம்

இறையுமெம் பவநோ யகற்றிவீ டளித்தற் கிசைந்
திலா யென்னினு மெழில்சேர், குறைவினின் சந்தா
னத்தெழு மடியார்க் குறுகியன் னவர்பணி குயிற்றி,
இறைசெழு நின்னூற் பொருள்விசா ரணைசெய் திருக்
குமா றேனுநன் கருள்வாய், முறைகண்முன் னொன்கு
முழங்குறு மிளமர் முதல்வனே மெய்கண்ட மணியே.

ஆசிரியப்பா.

மணிபல குயிற்றி யணிகெழு மாளிகை
மேனிலத் தமரும் பானலங் கண்ணியர்

ஆடவ ரொருபதா மூடலிற் றாதத
விலைவரம் பறியாக் கலன்பல மறுகில்
வயந்தரு சிறாரின் சயந்தனந் தடையும்
வளமலி செல்வத் திளமர்நன் னகரில்
உலகிருள் சீக்கு மிலகொளிப் பரிதியின்
ஆருயிர்த் திரளைச் சேரிரு டெய்த்துத்
தவாதுறை ஞான திவாகர னைய
மெய்கண்ட தேவச் சைவசித் தாந்த
பரமா சாரியன் வரசரோ ருகமென்
பொற்கழல் போற்று மொற்கமி லடியார்
திரிமல மகன்று திருவரு ளோடே
விரவுறு மின்ப மெய்ந்நிலை யாய
ஒன்றி யொன்ரு வுபர்பத மொன்றே
வேட்டன ராகி விரிகதி ரிரவி
எங்கெழுந் திடினு மிங்கெமக் கென்னென்
றிருப்பதை யன்றி யிதனின்வே றுய
ஐந்தரு நீழ லிந்திரன் பதமும்
ஆயிரம் பணாமுடிக் காய்சினத் தனந்தன்
மீமிசைத் துயில்கூர் நேமியோன் பதமும்
ஏனைய பிறவு மெய்த
நினைவது முளதோ கனவினு மிலையே. (௨௪)

வெண்பா.

இலையே பிரமமென்ப தெம்மையலா தென்னும்
புலையார் புவிக்கோர் பொறையாய்-அலைவாரே

அல்லாது நொச்சியமெய் கண்டாருக் கன்புசெய்து
நல்லாரா யுய்வாரோ நன்கு. (உ௫)

கலித்துறை.

நன்றே யுனதடி போற்றுந் திரமியின் ஞயனையேற்
கென்றே யுனதரு ளெய்துங்கொ லோவென வெண்
ணியெண்ணி, நின்றே னெனக்குனை யல்லாற் கதியிந்த
நீணிலத்தில், இன்றே யிளமர்மெய் கண்டா யெளி
யனை யேன்றுகொளே. (உ௬)

விருத்தம்

ஏன்று கொண்டிங் கென்னை நின்ன திணைய டிக்
குத்தொண்டென, கான்று விட்ட சோறெ னப்ப
வஞ்ச வாழ்வைக் காட்டினை, தோன்று மற்றி தற்கு
மேலும் வேறு பேறு சொல்வதென், சான்று நின்ற
நொச்சி யந்தை மெய்கண்ட சாமியே. (உ௭)

ஆசிரியப்பா.

சார்ந்தார்க் காத்தற் றலைவர் தங் கடனென்
றொருவா தொளிருந் திருவாய் மொழியை
உளங்கொண் டாய்வுழி யுலகோர் மூன்றினும்
மூவா ஞான முழுமுதற் றலைவன
௫. நீயே யாக நிகழுக் காண்டலில்
அடியே னின்றன் னங்கழ லெய்தினன்

சிவப்பிர காசத் தேசிகன் முதலாம்
தவப்பிர காசர் தரும்பணி யுவந்தே
இளமர்ப் பதிவயி னினிதுவீற் றிருக்கும்
மெய்கண்ட தேவ விமலமா மணியே
வழுவா நின்னுரை வாய்ப்பத்
தொழுவேன் றுயரந் துடைப்பதுன் கடனே

வெண்பா.

உன்கடனே யன்றோ வொதியேனை யுய்வித்தல்
என்கடவே னேழை யிழிதகையேன்—மின்கடவழ்
மாட மலியிளமர் வாழ்மெய்கண் டாநின்னில்
தாடலைபோற் கூடுநிலை தா. (௨௯)

கலித்துறை.

தாரா தொழியி லுயர்சிவ போகந் தரணிமிசை
யாரா தரிப்பவ ருன்னடி யேனை யளவில்பவந்
தீரா தடைந்தலுத் தேனினி யேனுமித் தீப்பிறவி
வரா தருளிள மர்ப்பதி மெய்கண்ட வானவனே (௩0)

விருத்தம்

வானநாட் டகத்தும் வாய்த்திடா வளமை மலியிள
மர்ப்பதி வைகும், ஞானநா யகனே மெய்கண்ட சிவ
மே நாடுகே வலத்தினின் றெடுத்துத், தீனனேன்
றனை யிச் சகலத்தி லுய்த்த திருவருட் டிறத்தையாய்
வுழிமேல், மானமார் சுத்த மளித்திடற் கன்றோ மற்ற
தும் வழங்குவ தென்றே. (௩௧)

## ஆசிரியப்பா.

என்றுபன் னிருவ ரிம்பரிற் றோன்றிப்
புறத்துறு மிருளைப் போக்குதற் பொருவத்
தேவர் திருவாய்ச் செவ்விதின் மலர்ந்த
செந்தமிழ்ப் பன்னிரு திகழ்சூத் திரமும்
ரு. ஆருயிர்த் திரளி னகத்திரு ணீக்கி
அருஞ்சிவ ஞானப் பெருங்கதிர் பரப்பி
விளங்கு மென்ன வெள்ளறி வுடையேன்
தொகையாற் றெழிலாற் சொற்றன னேனும்
உபமா னத்தினு முபமே யம்மே
கo. சிறப்புடைத் தென்னச் செவ்விதி னன்கு
தேர்ந்தே னன்றித் தெளியே னல்லேன்
விரிபொழி லிளமர் மேவும்
மெய்கண்ட தேவ விரைந்தரு ளெனையே (௩உ)

## வெண்பா

என்னைநின் னைத்தன்னை யிற்றெனக்காட் டாத
முன்னை யிருண்மலத்தை மோதியேப்-பின்னையே
நீயேநா னாக நிலவவருள் செய்யிளமர்
ஆயேநேர் நன்மெய்கண் டாய். (௩௩)

## கலித்துறை.

ஆய்ந்தா யலைமெய்ச் சிவஞான போதத் தரும்
பொருளைத், தோய்ந்தா யலையிள மர்ப்பதி மெய்

கண்ட தூயனடி, ஏய்ந்தா யலைமற் றவனடி யாருற
வேழைநெஞ்சே, காய்ந்தா யலைமட வார்மய லென்
கொல் கதியுனக்கே. (௫௪)

விருத்தம்.

உனையே யலதொரு கதிவே றிலையெனு முறையே
யலதுனை யொருநாளும், புனையே னலர்கொடு புக
ழேன் றுதிகொடு பொருளே யெனநனி மனமார,
நினையே னெனினுமு னடியே னெனுமொழி நிலமேல்
வரையிடு சுடர்நேராம், பினையே யுனதெனை மெது
வோ மெய்யுணர் பேரா ரிளமர்ப் பெருமானே. (௫௫)

ஆசிரியப்பா.

பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ப் பதியில்
செந்தமிழ் நாடு செய்பெருந் தவத்தால்
வந்தவ தரித்த மாசிலா மணியே
எய்ப்பினில் வைப்பே யிலகொளி விளக்கே
மெய்கண்ட தேவச் சைவமா முகிலே
திப்பியம் பழுத்த தேசிக வடிவே
சத்தறி வின்பத் தற்பரம் பொருளே
இளம ரமுதே யெளியேன் பேறே
தேவர் திருமுன் செய்வின் ணப்பம்
ஒன் றுள தது தா னெறியே னென் று
சுடுநர கழுந்தித் துன்புழந் திடினும்

நின்னடி மாட்டு நிறைபே ரன்பே
ஈங்கிது நினக்கின் றீவதன் றென்னில்
உலகினி துய்வா னொருநீ யுரைத்த
கரு. தன்னே ரில்லாத் தனிச்சிவ ஞான
போத மென்னுஞ் சாத நூலின்
பொருளினை யேனும் புந்தி
மறவா திருக்கும் வரமளித் தருளே. (௩௬)

வெண்பா

தரும வடிவாய்த் தழைமெய்கண் டானைத்
திருவிளமர் மேவித் தினமுங்—கருதி
அருச்சிப்பார் யாரே யவரேயென் னுளுங்
கருச்சிக்கார் காண்பார் கதி. (௩௭)

கலித்துறை.

கல்லா ரவையி னடுவிருப் பேனைக் கருணையினால்
நல்லா ரவையி னடுவினிற் கூட்டியிஞ் ஞாலமிசைப்
பொல்லா ரருணெறிப் போதம் வழங்கிப் புரந்தனனால்
செல்லார் பொழிலிள மர்ப்பதி மெய்கண்ட தேசிகனே.

விருத்தம்.

தேவரும் வியக்கு மிளமர்நற் பதியிற் சிறந்தொளிர் மெய்கண்ட சிவமே, சீனு மெனக்கு மலம்வியா பக மோ திகழ்வியாப் பியங்கொலோ வென்னின், மேவரு மிரண்டு மன்றது வியாத்தி விலக்கிட விலகிடு மென்

னில், ஓவுற வொழிப்ப தென்றுமற் றெந்தா யொழிப்
பவ ருனையலால் யாரே. (ஙகூ)

ஆசிரியப்பா.

ஏடார் கமலப் பீடார் மனையில்
பொற்பவீற் றிருக்கு முற்பவப் புத்தேள்
தாழா தியற்று மேழேழ் புவியில்
வெவ்வே றாக விளங்கும் பிறவி
அன்றொ டொட்டே யிந்நாள் காறும்
எளியே னெய்ந்தவை யிலக்கங் காணில்
வானின் மீனும் வண்புவி மணலும்
ஆருயிர்த் தொகையு மமையு மென்ப
அன்றியு மனைய வாழ்பவந் தோறும்
எய்திய துன்போ விதிற்பன் மடங்கே
இனுமிப் பிறவி யெய்து மென்னில்
என்றே யெளியே னெய்துவ னின்னே
இறப்பும் பிறப்பு மெய்துபல் துன்பும்
என்று நினக்கே யியற்கையா மென்னில்
ஆண்டவ னெனநீ யடியவ னெனயான்
இருத்தலி னென்னே யெய்துறு பயனே
ஆதலின்
இளமர்ப் பதியி லேய்மெய் கண்ட
தேசிக மணியே சிறியேன்
வன்பவ நீக்கி வழங்கருட் சீரே. (ச0)

வெண்பா.

மெய்கண்டான் வாழி விளங்க வவனுரைத்த
தெய்விகநூல் வாழிச் செகம்வாழி-சைவந்
தழைக்குமவன் சந்தானஞ் சந்ததமும் வாழி
செழிக்குமிநூல் வாழி சிறந்து.

எச்சிலிளமர்ப்பதி
ஸ்ரீ மெய்கண்டதேவர்
நான்மணிமாலை முற்றுப்பெற்றது.
ஸ்ரீ மெய்கண்டதேவர் மென்கழல் வாழ்க.

வெண்பா.

மாயாவா தப்பேயை மாற்றி யெனையாண்ட
தூயா திருவுறந்தைத் தோன்றலாம்—நேயாகேள்
நீயருளு மெய்கண்ட நீணான் மணிமாலை
நாயடியே னோவருணன் கு.

அ. ரா. அ.
பூவாளூர்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# சிறப்புப்பாயிரங்கள்.

---

## திருக்கயிலாயபரம்பரை தாயுமானசுவாமிகள்மரபு எச்சிலிளமர் மெய்கண்டதேவராதீனத்திற்குரிய சிவப்பிரகாசசுவாமிகள் அருளியவை.

சொல்லாரும் பொன்னிவளஞ் சுரந்தாரும் புனனாட்டிற் சுடரி ஞேங்கி, வில்லாருங் கொடுமுடிகண் மேலாருந் தென்கயிலை விலங்க வொப்ப, நெல்லாரு நன்மணிகளிழைத்தாரும் புரிசைநிறை யிளமர்மேவிக், கல்லாருங் கல்விநலங் கலந்தாருந் தெருளுமடங் கனின வாரும். (க)

சீரோங்கு திருக்கயிலைத் திருநந்தி மரபுதித்த தேவ னெங்கோன், பாரோங்கு சந்தான பரம்பரைமெய் யடியர்தினம் பணிவிற் சாத்துந், தாரோங்கு மீசவடிக டழைத்தோங்கு மெய்கண்ட தலைவற் கன்போ, டேரோங்கு பாமாலை யியம்பினனுன் மணிமாலை யேவ னென்னில்.

தருவுறையூ ரைவண்ணத் தகையுறையூர் வேத நெறித் தலைவர் கீர்த்தி, மருவுறையூ ராகமச்செம் மதி யுறையூ ரெக்கலையு மதிக்கச் சாற்றக், குருவுறையூ ரென்புமருள் கொடையுறையூ ரெவ்வளமுங் குறையா தோங்கும், திருவுறையூர் முத்தியருட் டிருவுறையூ ராமுறையூர் செப்புங் காலே. (௫)

இவ்வுறையூ ரினிதமரு மிருங்கொடையா னுயர் தேவ ராய னென்னுந், தெவ்வரிடர் களைவலத்தான் செய்தவத்தா லவதரித்த தீரன் மார, னெவ்விடா வுரு நலத்தா னுயர்கல்விப் பெருவளத்தா னொழுக்க ன்போ, டெவ்வமிலா வாசார வியற்கையுளான் றவந் தானத் திறைவ னின்னும். (௬)

கைவண்ணத் துடையானுங் கதிர்வண்ணத் தலரா னுங் காணாது கெட்டா, வைவண்ணப் பெருந்தகையி னருத்தயா மப்பூசை யன்பா லாற்று, முய்வண்ணத் திறமுடையா னுயர்சைவ சித்தாந்த வுணர்வேயோங் கச், செய்வண்ணம் பலசபைகள் சேர்த்தளிப்பா னவன்பெரிய சாமிச் செம்மல். (௭)

தொண்டனு மிவன்றனக்குத் தோழனு மெல்லோர் க்குந் தொல்பூ வாளு, ரண்டர்நா யகற்போற்று மமிர்த நா மத்தகையா னறிந்திந் நூலைப், பண்டிதபா லரும் படித்துப் பத்திநலம் பெறவெண்ணிப் பரிந்த லேகங், கொண்டெழுதி டாவெழுத்திற் குயிற்றியரங் கிடை யுலவக் கொடுத்தான் மன்னே. (௮)

### திருக்கயிலாய பரம்பரைத்திருவாவடுதுறை ஆதீனத்து அடியார் குழாங்களிலொருவராகிய

## பரமசிவசுவாமிகள்

அருளியவை.

விண்ணோங்கும் பொழிலுறந்தைப் பெரியசாமிக்
கவிஞர் வேந்தர் வேந்துத், தண்ணோங்கு மெச்சிலின
மர்ப்பதிமெய் கண்டகுரு சரணப் போதுக், கெண்
ணோங்கு பணிமாலை யெண்ணைந்து கவிமலரி னியற்றி
யீந்தானை, மண்ணோங்கு மனைபனைக்குங் கண்ணோங்கு
மணியெனவே மதிக்க மாதோ. ௧

அத்தகைய னறிவுறுத்தப் பலகலையு மாய்ந்துணரு
பமிர்த நாம, வித்தகனற் பூவாளூர் தனிலுறையுஞ்
சித்தாந்த மேன்மை சான்ற, வுத்தமனைப் பெற்றிய
ருட் நனிமகிழ வுளங்கொண்டே யோங்குந் நூலைப்,
புத்தமுத மெனப்புலவர் கொண்டாட வச்சியற்றிப்
புகழ்பெற் றனனே.

### திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனத்து அடியார் குழாங்களிலொருவராகிய

## சண்முகசுவாமிகள்.

அருளியவை

மடல்விரிந்து மதுவொழுகும் பொழிலுடுத்த விள
மர்நகர் மடத்தின் மேவு, முடனிறைந்த வுயிரினிகர்

சந்தான குருத்தலை வனுபய பாதத், திடனமிகுந்த
பயனளிக்கு மெனவொருநான் மணிமாலை யிசைத்தா
னத்தைக், கடல்வருநல் லமுதென்கோ கண்டென்கோ
வன்றிபெறைதக் கரைவ னம்மா. க

இத்தகைய நூலிப்ப விருந்தவஞ்செய் தானுற
ந்தை யெழுந்த சீமா, னுத்தமநற் கல்வியறி வருள்
தவந்தா னம்பலவு மொருங்கு வாய்ந்தே, சத்தசத்தி
னிலையுணர்ந்தோன் சந்தானா சிரியர்பதந் தலைமேற்
கொள்ளுந், கந்தனுயர்ந் தார்மதிக்கும் பெரியசா
மிப்பெயர்கொள் சுகிர்தன் மாதோ. உ.

திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனத்து
அடியார் குழாங்களிலொருவராகிய

## சொக்கலிங்கசுவாமிகள்.

அருளியவை

திருக்கயி லாய பரம்பரை யுதித்த சிவப்பிர காச
மெய்க் குரவ, னிருக்குமெய் கண்ட தேவனன் மட
த்தி லெழுந்தமெய் கண்டமா மணிதாட், கருக்கனி
லொளிரு நான்மணி மாலை யணிந்தன னவனெவ
னென்னின், மருக்கம ழுறந்தைச் சைவசித் தாந்த
மாசபைத் தனபதி யின்னும். க

சீர்வளர் கமலச் செம்மலும் மகிழத் தேவரா யத்தவ
னீன்றோன? பார்வள ருறையூர் பஞ்சவண் ணேசப்
பண்ணவ ருருத்தயா மத்தி, னேர்வளர் தூயக் கட்
டளை யினிதி னியற்றிடுந் தவநெறி பூண்டோன், கார்

வளர் கொடையன் சைவநூலாதி கலையுணர் பெரிய
சாமியரோ. ௨

தில்லைவளாகம் சிவானந்த நிலைய மடாலயத்திற்குரிய

## ஆனந்த சண்முகசரணாலயசுவாமிகள்.

அருளியவை

திருவினொன்றநற் சிவப்பிரகாசமெய்த் தவர்க்குத்
தருவினொன்றவித் தகமருண் மெய்கண்ட தலைவ
னுருவினொன்றவுள் ளொளியொளி யுதவிடு நாட்கம்
மருவினொன்றநான் மணியெனு மாலைசொற் றனனால். ௧

கரிய சாமியுங் காணுதற் கரியநற் பதமெய்த்
தெரிய சாமியின் றிருவடித் துணையகம் புனைதற்
குரிய சாமிபொன் னுறைதரு கோழியம் பதியிற்
பெரிய சாமியைப் பெரியரும் போற்றுநா லினை. ௨

பைகண்ட சேடனும் பாரதி கேள்வனும் பாடுகின்ற
மைகண்ட மூர்த்தி தனைமாண ருளாலிந்த மாநிலத்தில்
மெய்கண்ட தேசிகன் மேன்மணி மாலை விளம்பலுற்றான்
கைகண்ட முக்கனி போலியர் சீனியுங் கைத்திடவே. ௩

ஞானசித்திப்பத்திராதிபரும் சைவப்பிரசாரகருமாகிய
யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வித்வான்

## சி. தாமோதரம்பிள்ளையவர்கள்,

இயற்றியவை.

பூமேவு திறத்தவனும் பொறிமேவு நிறத்தவனும்
போற்றவென்றுந், தாமேவுந் திருவுறந்தை சைவ

ண்ணை நாதரிடந் தாங்கு மம்மைத், தேமேவு மன்பனை ருட் சைவநூற் றுறைபலநாந் தெரிக்கத் தேர்ந்தோன், நாமேவு கலைவாணி யருட்புதல்வன் றெருட்புலவர் நயக்கும் மன்னன்

மெய்கண்ட கொண்டலெனை வெந்நாளுங் கொடுத் துதவும் பெரிய சாமி, பொய்கண்ட வறுமூவர் புறம் பொழியவோ ரறுவர் போற்ற வோங்குஞ், செய்கண்ட வெச்சிலிள மர்ப்பதியில் வாழுமெங்க டேவனை, மெய்கண்ட குரவனென் மணிமாலை யொன்றுசொற்றான் விளங்க மாதோ.

சித்தாந்தசரபம் அஷ்டாவதானம்.

## பூவை· கலியாணசுந்தரமுதலியாரவர்கள்.

இயற்றியவை.

கங்கையினுஞ் சிறந்தகொள் ளிடக் கரையி னெச்சி யப்பேர் கவினுற் றோங்குங், காசனுறு மெச்சிலிள மர்ப்பதிம டாலயத்திற் கருணை வாய்ந்த, எங்கள்குரு மெய்கண்ட பணியின்சீ ரெவ்வெவரு மேத்தி டற்கே, யெழிற்றவசி காமணிநற் செந்தமிழ்சி காமணிபல் லிய னுலாவும், மங்குறவ ழெயிலுறையூர் வருபெரிய சாமிநா வரர்கோ மான்றன், மகிமையுறு சுத்தாத்து விதப்பொருள்க ளாங்காங்கு பலிந்து தோன்ற, தங்கிய சொன் னயம்பொலியு நான்மணிமா லைப்பனுவற்

றகவாச் சொற்றான், தக்கமே தாவிபர்க ணனிவியந்து கொண்டாடிச் சாற்ற மாதோ.

இன்னநூ லிற்சைவ மணங்கமழ்வ தனைநோக்கி யிவாபா ணனும், மன்னியவை திகசைவ சித்தாந்த நாலுணர்ந்த மதிமிக் கோனுங், கன்னல்விளை பூவாளூ ரமிர்தவிற் பனவறிஞன் கனிவி னோடும், நன்னயவச் சிவிமேலேற்றித் தமிழ்நாடு குதூகலிக்க நல்கி னானால்.

திருப்புத்தூர்ப்புராணம், திருவுசாத்தானமென்னும்,
சூதவனபுராணமுதலிய பன்னூலாசிரியராகிய

**கரைக்குடி சொக்கலிங்கசெட்டியாரவர்கள்**

இயற்றியவை.

பொன்னிறத்துக் கார்வணன்கட் போந்தவிரு சுத்திமார் புகழ்வ லத்துந், தன்னிடத்து முறுமிளைய சாமிக்கு மொருபெரிய சாமி யாய, முன்னிபத்தொண் முகப்பொல்லா முதுகுரவர் சிவாகமங்கண் முழுதுந் தேற்றச், சின்மயத்துள் ளொளிவிளக்கித் திருவெண் ணெய் யமர்ந்தருண்மெய் கண்ட தேவன்.

அன்னதனி வெண்ணெய்நக ரருட்கொலுவீற் றிருந்தருளு மதனைப் போல, இன்னிலஞ்செய் பெருந்தவத்தா லெச்சிலிள மர்ப்பதியி லெழுந்து நாளும், உன்னரிய திருக்கோல முழுவலன்பர்க் களிதருளி யொளிரு மேன்மை, பன்னரிது பிறாலென் றொரு கோட்டு மாதங்கப் பரமனை.

அப்பெரிய சாமிதன தொண்பெயர்கொ ளொருபு

ணித னகத்து ணின்றே, செப்பரிய மெய்கண்ட சிவ குருசி காமணியின் றெய்வ வாய்மை, எப்பொரிய வருஞ்சிரங்கொண் டின்புறநான் மணிமாலை யெனுநா லோங்க, ஒப்பரிதா யருளினனை னுதன்பெருமை மற்றினியா ருரைக்க வல்லார்.

ஷ. அவதானியார் மாணாக்கர் வண்ணக்களஞ்சியப்

## காஞ்சி நாகலிங்கமுதலியாரவர்கள்

இயற்றியது.

அத்துவித மெய்கண்ட பாலகுரு மணிமாட்சி யகிலத் தோங்க, சுத்தவை திகசைவ சித்தாந்த வுண்மை யெலாந் துலங்கி நிற்கும், மெத்தியநான் மணிமாலை சொற்றிட்டான் செந்தமிழின் மேன்மை தேர்ந்த, புத்திமா னுறையூர்நற் பெரியசா மிப்பெயர்கொள் புலவரேறே.

மகாவித்வசிரோமணி சதாவதானம் ஸ்ரீமத் நா. கதிரைவேற் பிள்ளையவர்கள் பிரதமமாணாக்கருள், சென்னை வேதாகமோக்த சைவசித்தாந்த சபையின் கௌரவ காரியதரிசியுமாகிய புரசை

## மு. பாலசுந்தரநாயகரவர்கள்

இயற்றியவை.

கலைவலா ருள்ளக கனிவொடு நவிலுங் காவிரி யுபா நதி யெனுங், குலையவிர் சோலைக் கொள்ளிடக் கரையிற் குலவுநொச் சியமெனக் கூறுந், தலையுறும்

மெச்சி விளமர்நற் பதியிற் றழைபெருங் கோயிலி
னுளாய், நிலைபெற விளங்கு மெங்குரு மணியி னிலை
மையா ருரைத்திட வல்லார்.

அத்தனை யண்ண லாயமெய் கண்ட தேவனு ரடி-
மலை ரென்றார், பத்தியா யேற்றிப் பாருள வலவர் பண்
புடன் காணவிரு ளுறான்ற, உத்தமச் செய்யு ளுருப்பு
கண் மிளிர வொருபொரு நான்மணி மாலை, வித்தக
போங்க விளமபின னகு மேதினி வியந்திட வம்பா

அன்னவன் யாவ னென்றுரை வாருக கவணியி
லாருறை யூரில், முன்னவன் சீர்த்தி தனைமற வாத
தேவரா யப்பிள்ளை மொய்ம்பின், துன்னிசெய் தவத்
தான் மகவெனத் தோன்றிச் சொல்லருங் கலைபல
தேர்ந்தே, மன்னுபே ரன்பு கொண்ட நம் பெரிய சாமி
யாம் புலவர்கோ மானே.

மகாவிதவான் ஸ்ரீமத் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள்
மாணாக்கரி லொருவரும் எச்சிலிளமர்
மெய்கண்ட தேவராதீன வித்வானுமாகிய

## பாலகுருகவிராயரவர்கள்.

இயற்றியவை.

எங்குரவற் கினியனுறை யூர்ப்பெரிய சாமிவள்ள
லிளமர் மேவு, நங்குரவன் மெய்கண்ட முனிவனுன்
மணிமாலை நவின்றரு ளன்ற, பொங்குபெரு மகிழ்ச்சி
யினு ளுமதனைக் கைக்கொண்டே போற்றிப் போற்றிக்,

கஙகுலபக லறவெழுநத வின்புருவ மடைவயிஙகு கணணஙகொ ளீரே

புததமுதம போலினிக்குஞ சிவஞான போதமுனம புகனற யெமமா, ணிததமிழி னுளமகிழவ னெனவுரை ததல வியபபன்றே விரத்தி னாகி, யுததமருங கொளு வானறே வெனதுபிள்ளை த தமிழினையு முவநதுகொ ண்ட, வததனவ னெததமிழுக கன்புசெயான் முதத மிழுக் கரசே யனறோ ௨

மதுரைத்தமிழ்ச்சஙக வித்வானும திரிசிரபுரம
எஸ் பி. ஜி காலேஜ் தமிழ்த்தலைமைப் பண்டிதரும்
ஆகிய

## ந மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள்

இயற்றியது

அகவையொரு மூனறதனிற் சிவஞான போதநூ லகில முய்யத், தகவுடனே யருள்பெருமா னெச்சி லின மாபபதியிற் சாருமநஙகள, பகலணைய மெய்க ண்ட சறகுருநான மணிமாலை பரிவிற் சொற்றுன புகழ்பொருண்மிக் குடையனுறை யூர்பபெரிய சாமி யெனும புலவ ரேறே.



ஸ்ரீ மெய்கண்டதேவர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானசம்பந்த குருப்யோ நம:—

# ஸ்ரீ மெய்கண்டதேவர் வைபவசங்கிரகம்

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்,

திருவெண்காட்டுத் தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டு முருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டு மிசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி லுறைவானும் விடைகாட்டுங் கொடி
யானே

சைவசமயாசாரியார் நால்வருள் ஆளுடைய வரசும் ஆளுடைய நம்பியும் திருவவதாரஞ்செய்தருளிய மகாமகிமைதங்கிய நடுநாட்டின்கண் திருத்தூங்கானை மாடமெனத் திருநாவுக்கரசு நாயனார் தமது தேவாரத் திருப்பதிகத்துட் கூறியருளிய திருப்பெண்ணாகடக்ஷேத்திரத்திலே குருலிங்க சங்கம பத்தியிற் சிறந்த அச்சுதர்களப்பாளரென்னும் ஒரு வேளாளகுலதிலகர் நெடுங்காலம் பிள்ளைப்பேறின்மையால் வருந்தித் தமது குலாசாரியாருக்கு விண்ணப்பஞ்செய்ய அவர்

பெரிதும் ஆராய்ந்து திருநெறித்தமிழ் வேதமாகிய தேவாரத் திருவருட்பாத திருமுறையிற் கயிறுசாத் திப்பார்த்தருளினார். அங்ஙனம்பார்க்கவே திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்தருளிய "கண்காண்டு நாதலானும" என்னும் முதற்றிருக் குறிப்பையுடைய திருவெண்காட்டுத் திருப்பதிகத் திலே இரண்டாந்திருப்பா சுரமாகிய

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே

என்னுந் திருப்பாடல் உதயமாகப் பொரிதுமுவந்து அதன் செம்பொருளை அச்சுதர்களப்பாளரு க்கு விளக்கியருளினா

அதன் பின்பு அச்சுதர்களப்பாளர் திருவருளை வியந்து ஆசிரியப் பெருந்தகையாரிடத்தே விடை கொண்டு தமது கற்பிற்சிறந்த மனைவியாரோடு சுவே தாரணியமென்னும் திருவெண்காட்டுத் திருப்பதி யையடைந்து அங்குள்ள சோமசூரியாக்கினி யென் னும் முக்குளத்தீர்த்தத்திலே விதிப்படி மூழ்கி சுவே தாரணியேசுரரையும் பிரமவித்தியா நாயகியாரை யும் தரிசித்து வழிபடுவாராயினர். அங்ஙனம் வழி படும் நாளிலே ஒருநாள் சுவேதாரணியேசுரர் அச்

சுதர்களப்பாளருக்குச் சொப்பனத்திலே தோன்றி "ஸைந்தநீ கவலையொழி நினக்கு இத்தமிழுலகமும் யும் வண்ணம் நமது திருக்குமாரனாகிய திருஞானசம்பந்தனென்னவே யாவருங்கருதும்படி திராவிட வேதச் செம்பொருளைத் தன்னகத்தடக்கிய சைவசித்தாந்த சாஸ்திரத்தை யருளிச்செய்து சைவ ஸ்தாபனஞ் செய்யத்தக்க ஒருபுதல்வனைத் தருகின்றோம் அவன் சந்தானாசாரியத் தலைமை யெய்திச் சிறந்துவிளங்குவன்" எனத்திருவாய்மலர்ந்தருளித் தம்முருக்கரந்தனர்.

உடனே விழித்தெழுந்த அச்சுதக்களப்பாளர் பெருமகிழ்ச்சிகொண்டு தமது மனைவியாருக்குத் தெரிவித்து இருவரும் முன்போலவே வழிபட்டுவரும் நாளில் நல்லசுபதினத்திலே பரசமயத்தருக்கு நீங்கவும் சுத்தாத்துவித சைவசித்தாந்த ரகசியம் உலகமெங்கணும்மோங்கவும் பன்னுடுசெளிவும் தென்னுடே சிறக்கவும் ஒருதிருக்குமாரர் திருவவதாரஞ் செய்தருளினர். அதுகண்ட தந்தையார் ஆராமகிழ்ச்சியோடு மகப்பேறு விழவுகொண்டாடி தமது குலாச்சாரப்படி சாதகருமமுதலிய சடங்குகளைச் சிவாகமத்தில் விதித்தவாறே முடிப்பித்து உரியபருவத்திலே சுவேதவனப் பெருமாள் என்னும் பிள்ளைத் திருநாமம் தரித்துவழங்கிவருவாராயினர்.

இங்ஙனமாக சுவேதவனப் பெருமாள் பிறைமதி போல வளர்ந்து வருநாளிலே திருவெண்ணெய் நல்லூரின்கண் வசித்தருளும் அவர் தாயுடன் பிறந்தாராகிய காங்கேயபூபதி வேணவாவோடு அழைத்தமது இல்லத்திற்கு எடுத்துக்கொண்டு சென்று பேரன்போடு வளர்க்க வளர்ந்து இரண்டுவயதிற்றனே அத்திருவெண்ணெய் நல்லூர் ஆலயத்தின்கண் எழுந்தருளிய மூத்த நாயனாராகிய பொல்லாப் பிள்ளையார் பின்விளைவறிந்து வேதாகமாதிக்கலைகளைப் பயிற்றிவர மெய்யுணர் வினராய் வெழுந்தருளியிருந்தனர்.

இப்படி நிகழும் நாளிலே திருக்கயிலாய மலையிலே அருட்கல்லால நீழலிலே படிகரூபமும் திருநேத்திரமும் உருத்திராக்ஷவடம் சின் முத்திரை அமுதகும்பம் சிவஞானபோத மிவைதரித்த சதுர்ப்புயங்களும் கொண்டெழுந்தருளிய முதற்குரவரான தக்ஷிணாமூர்த்தியை முன்னொருகாலத்திலே தொழுதுமுன்னின்ற நந்திபெம்பெருமானுக்கு சிவபெருமானார் திருவருள் சுரந்து தமது திருக்கரத்திலமைந்துள்ள சர்வாகம முதன்மையாகியதும் இரௌரவாகமத்திலே எழுபத்து மூன்றாவதாகிய பாசமோசனப்படலத்துள்ளே அருட்டுப்புச்சந்தசாக விளங்குவதுமாகிய பனிருசூத்திரத்தால் பொலியும் "சிவஞானபோதம்" என்னும் நூலை செவியறி வுறுத்தருளினர். நந்தி பெருமானும் அதுகேட்டதுணையானே

எல்லா ஐயமும் நீங்கி மெய்ப்பொருள் தெளிந்து பின்னர் அதனைத் தம்மாணுக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த சனற்குமாரமுனிகட்குச் செவியறிவுறுத்தருளினார். அவர் தம்மாணுக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த சத்திய ஞானதரிசினிகளுக்குச் செவியறிவுறுத்தருளினார். அவர் தம்மாணுக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த பரஞ்சோதி மாமுனிவருக்குச் செவியறிவுறுத்தருளினார்.

அப்பரஞ்சோதி மாமுனிவர் தென்மலயத்தமருங் குறுமுனிவரைக் காணுமாறு திருக்கயிலையை நீங்கி காசி முதலிய க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு ஆகாய கமன மார்க்கமாகச் செல்லுங்கால் திருவெண்ணெய்நல்லூரை அணுகலும் இவருக்குக் கமன சித்தித் தடைப்பட்டது; தடைப்படலும் ஈண்டு ஓர் அதிசயமிருப்ப தென்னெனக் கீழிறங்கி நோக்கு வாராயினார். நோக்குங்கால் அங்கே மனையிற்றிருக் கோயிலமைத்துச் சிவலிங்கந்தாபித்துப் பூசை செய்து திருவிளையாட்டயரும் ஐந்து வயதுள்ள சுவேதவனப்பெருமானைக் கண்டு வியந்து தமது ஞானதிருஷ்டியால் திருவருளை நோக்கிப் பார்க்குமளவில் சிவபெருமானார் திருவுள்ளக்குறிப்பை யுணர்ந்து அம்மெய்யன்புடைய சாமுசித்தருக்குத் திருவருணோக்கம் பாலித்து "மெய்கண்டதேவர்" எனத் தீக்ஷாபிதானமளித்துத் தமது குருமரபில் வரும்

"சிவஞானபோதத்தை" உபதேசஞ் செய்தருளி இதனை இவ்வுலகிலுள்ளார் உய்யும்வண்ணம் தமிழில் மொழிபெயர்த்து வார்த்திகப்பொழிப்புரையும் செய்வாயாக என்று திருவாய் மலர்ந்தருளிச் செல்வாராயினார்.

பின்னர் அங்ஙனங் கேட்டருளிய அம்மழவுருவப் பெருந்தகையார் தமது வரவை யோர்ந்து ஆசிரியர் பணித்தவாறே அச் "சிவஞானபோதத்தை" மொழிபெயர்த்து வார்த்திகப் பொழிப்புரையுஞ்செய்தருளி அதனைத் தம் மாணாக்கர் நாற்பத்தொன்பதின் மருக்குஞ் செவியறிவுறுத்தருளினார். அவரிற்றலைமை வாய்ந்தவரும் திருத்துறையூரில் ஆதி சைவர் குலத்தில் திருவவதாரஞ் செய்தருளியவரும் சகலாகம பண்டிதரெனுஞ் சாரணப்பெயர் வாய்ந்தவருமாகிய அருணந்திசிவாசாரியார் அதனைத் தம்மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்தவரும் திருக்கடந்தை எனும் திருமருதூரில் சாமவேதியர் மரபிலே பராசரமகாரிஷி கோத்திரத்திலே திருவவதாரஞ்செய்தருளியவருமாகிய மறைஞானசம்பந்த நாயனருக்குச் செவியறிவுறுத்தருளினார், அதனை அவர் தம்மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்தவரும் விராட் புருடனுக்கு இருதயத்தலமாகிய சிதம்பர க்ஷேத்திரத்தில் தில்லைவாழந்தணரில் ஒருவராய்த் திருவவதாரஞ்

செய்தருளியவருமாகிய உமாபதி சிவாசாரியாருக்குச் செவியறிவுறுத்தருளினார். மெய்கண்ட தேவராதிய இந்நால்வரும் சந்தானாசாரியர் என அடிப்பட்ட சான்றோரால் வழங்கப்பெற்று வழிபாடுநடை பெற்று வருகின்றது. இந்நால்வரும் இவ்வுலகின் கண் ஆங்காங்கு நடாத்தியருளிய அற்புதத் திருவிளையாடல்களுக்களவில்லை. அவற்றை ஈண்டு விரிப்பிற் பெருகும். இவற்றை நன்குணர விரும்புவோர் மெய்கண்ட விஜயம் மெய்கண்ட சைவதீபிகை உமாபதி சிவதிக்விஜயம் முதலிய வடமொழி கிரந்தங்களிலும் நந்திமரபட்டவணை மெய்கண்ட தேவலீலை சந்தானாசாரியார் புராணம் சந்தான குரவர் புராணசங்கிரகம் சூதவனபுராணம் முதலிய தென்மொழி நூல்களிலும் கண்டுணர்வாராக.

தண்பொழில்சூழ் சண்பையர்கோன் றமிழ்ஞான சம்பந்தன், விண்பொலி வெண் பிறைச்சென்னி விகிர்தனுறை வெண்காட்டைப், பண்பொலிசெந் தமிழ்மாலை பாடியபத் திவைவல்லார், மண்பொலிய வாழ்ந்தவர்போய் வான்பொலியப் புகுவாரே.

திருச்சிற்றம்பலம்.

சந்தான குரவர் நால்வரின் திருநக்ஷத்திரம்.

சித்திரை யத்தமுமாபதியாவணித் திங்கடனி, லுத்திரஞ் சீர்கொண் மறைஞான சட்பந்தரோதுகன்னிச், சுத்த மெய்ப் பூர மருணந்தியைய பசிச் சோதிதனில், வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே.

---

சந்தான குரவர் திருக்கோயில் கொண்ட தலம்.

சீரார் திருவெண்ணெய் நல்லூரின் மெய்கண்ட தேவனிந்தப், பாரார் திருக்களாஞ் சேரியில ஞான சம்பந்தனணி, யூரார் திருத்துறை யூரருணந்தியுமா பதிநற், காரார் திருக்கொற் றவன் குடி கோயில் கலந்தனரே.

இந்நூல் உறையூர் சைவசித்தாந்த சபையிலும், பூவாளூர் சைவசித்தாந்த சங்கத்திலும், எச்சிலியர் மெய்கண்டதேவர் மடாலயத்திலும், சிதம்பரம் உலகமூர்த்தி தேசிகர் மடத்திலும், கிடைக்கும்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தகுருவேதுணை.

நொச்சியம் என்று வழங்கும்
தேவார வைப்புத் தலமாகிய
எச்சிலிளமர்ப்பதி.

## ஸ்ரீ மெய்கண்டதேவர்

# நான்மணிமாலை.

காப்பு.

ஸ்ரீ பொல்லாப்பிள்ளையார்.

பூமேவு பொழில்சுலவு மெச்சிலிள மர்ப்பதியிற் பொருந்த வோங்குந், தேமேவு சித்தாந்தத் தினகரனு மெய்கண்ட சிவத்தின் செய்ய, தூமேவு மலரடிக்கு நான்மணிமா லிகையொன்று சூட்ட நாளு, மாமேவு மொருகோட்டுப் பொல்லாத பிள்ளைபத மனத்துட் கொள்வாம்.

## பாயிரம்.

ஸ்ரீ பஞ்சவண்ணேசர்.

நடுவெழுத்தலங்காரம்.

விண்ணினபேர் தூலப்பேர் வெறியின்பேர் கடிப்பேர் மெல்லியர்கா லணியின்பேர் சென்னியர்பேர் கட்பேர், நண்ணிபவிவ் வேழ்மொழியி னடுவெழுத்துப் பேரார் நவிலுமற்றீ ரேழெழுத்தா னருமோரேழ் பேரில், எண்ணியவீ ரொப்பாளோ டிரண்டேறி வந்தே யிருமூன்றி லொன்றகற்றி யெனக்கெழின்மூன் றுருந், தண்ணியநான் கிளையருளத் தன்னமுமைமந் தில்லார் தாவில்புக ழுறையூரின் மேவுபரம் பொருளே.

ஸ்ரீ காந்திமதி அம்மை

நடுவெழுத்தலங்காரம்.

மாலுமிவா னரமாற்றுர் மாமைபுன் காலி வருமிவற்றி னடுவெழுத்தால் வயங்குதிருப்பேராள், ஏலுமற்றைத் தசவெழுத்தைம் பதத்திலிடை யாடு மிறைவர்பஞ்ச வண்ணருக்கே யிமையுமெழி லேந்தாள், நாலுமொன்று மிரண்டுமுள நடுங்கிவெளி யோடநணிவென்று விளங்குதுழ னயனமுக முடையாள், சேலுகளுந் தடம்பணைசூழ் திருவுறையூ ருறையுந் தேவிசிவ காமியவள் சீர்பரவு மனமே.

### ஸ்ரீ நிருத்த விநாயகர்.

திருத்தகுமா மறைமுடிவிற் றிகழ்தருசீர் மனுவாய, அருத்தமிகு பிரணவத்திற் கரியபரம் பொருளான, மருத்தபொழிற் றிருவுறந்தை மாநகரி லமருமருள், நிருத்தகய முகவள்ள னிறைகழற் றாமரைதொழு வாம்.

### ஸ்ரீ சுப்பிரமணியர்.

தமிழ்மொழி தனக்கோர் தனிப்பெருங் குருவாய்த் தயங்குறு தகைமையி னாலுங், தமிழ்நலம் வேட்டுப் புலவர்கள் பலர்பாற் றகத்தொடர்ந் திட்டமை பானும், தமிழ்மலர் கொடுதன் சரண்மலர்ப் போற் றுந் தமியனை விலக்கிடா தளிப்பான், தமிழ்மணங் கமழுந் திருவுறை யூரிற் சார்சர வணபவ குகனே.

### ஸ்ரீ சமயாசாரியர் முதலினோர்கள்.

திருஞான சம்பந்தர் திருநாவுக்கரையர் திருநாவ லூர்நம்பி திருவாக வூரர், மருவாரு மலர்த்தெரியற் றிருச்சேஞ்ஞ லூரர் வயங்குமருண் மெய்கண்டார் வளருமரு ணந்தி, குருவாரு மறைஞான சம்பந்தர் கொற்றங் குடியார்மற் றிவர்க்குப்பின் குலவினர்கண் மேலும், வருவாரென் றிவர்கண்மரு மலர்ப்பதங்க ளை மறவாமல் வாழ்த்துகிற்பாம் பிறவாம லினியே.

பாயிரம் முற்றும்.

---

## நூல்

### வெண்பா.

சீர்பூத்த தெய்வத் திருவிளமர் மேவியமர்
ஏர்பூத்த மெய்கண்ட வீசனே—கார்பூத்த
மும்மலத்தா னொந்தனது முன்னின்ற நாயேனைச்
செம்மலர்த்தா டோயவருள் செய். (க)

### கலித்துறை.

செல்லார் பொழிலிள மாப்பதி மேவிய தெள்ள முதை, வல்லார் பரவுறு மெய்கண்ட தேசிக மாமணியைப், பொல்லா ருளத்துட் புகுதாத சோதியைப் போற்றுமின்காள், சொல்லார் கடற்புவி யுள்ளீர் பரகதி தோய்வதற்கே. (உ)

### விருத்தம்.

தோற்றமு மீறு முள்ளதன பாலே கிடத்தலி னென்றனீ சொற்றத், தேற்றமார் மொழியின் செம்பொரு ளுணராச் சிதடர்தாந் தோற்றமீ றில்லா, ஆற்றலார் கடவு ளின்றுகொ லென்ன வாசங்கை நிகழ்த்திடாப் குவரே, ஏற்றமா ரெச்சி லிளமர்நற் பதிவா ழீணையிலா மெய்கண்ட சிவமே. (ங

### ஆசிரியப்பா.

சிவமே முதலாச் செப்புமோ ராறும்
அருதியிய யென்னத் தனுதுபே ரருளால்

ஆரண முதலா மாரண வழியால்
எம்மைத் தேற்றிய செம்மையார் செம்மல்
எச்சி லிளமர் மெச்சுறு பதியான்
பொய்கண் டகன்ற மெய்கண்ட நாதன்
அவனிரு சரண்டொழு தடியோம்
பவமெனும் வன்பகை பாற்றுவ மின்னே. (௪)

வெண்பா.

இன்றே யிரிந்த திருண்மலங்கண் மூன்றும்
அன்றே தொடர்ந்தசெயற் றேற—நன்றேசார்
எச்சிலிள மர்ப்பதியி லைப்மெய்கண் டானடியை
உச்சியிற்கொண் டேத்த வுவந்து. (௫)

கலித்துறை-

உவப்போ டுனைதுயர் சித்தாந்த சைவத் தொழுக லின்றி, அவப்போ திழைக்கு மடியேற் கிரங்கி யருள் கிலையேற், பவப்போ ரொழிந்துன் பதமல செய்தலிப் பாவியென்றே, தவப்பே றெனுமிள மர்ப்பதி சத்ய தரிசனியே. (௬)

விருத்தம்.

சரியைகிரி யாயோக ஞானமென நாளுஞ் சாற்று
சதுர்ப் பாதமவை தகவேவொவ் வொன்றும், விரியும்
வகை நந்நான்காய்ப் பதினாறென் ருகு மெய்ந்
நெறியை நன்குணர்ந்த மேலோர்க ளெல்லாம், உரிய

MAHAMAHOPADHYAYA

நின தொண்சமுக முற்றுடணி யாற்றி லொப்பரிய பர
போக முறுவரிழி நாயேன், றிரியவல னலதுபணி
செய்தறியே னெனையா டிகழேச்சி விளமரமர் திரு
மெய்கண் டவனே. (எ)

ஆசிரியப்பா.

கண்டதே காட்சி கொண்டதே கோலம்
உண்டதே போக மண்டலத் தன்றி
பின்மைநா ளூறுகதி யென்றொன் றுளதோ
என்றிறு மாக்கும் புன்றொழிற் சிலவர்
ரு. குழுவிற் சாரா தொழுகுறப் பணித்தும்
தத்துவ நியதி தாமே சனேந்தே
ஒத்தவந் நிலையி லுறுமுயிர் தானே
பிரமமா மென்னச் சிரமமோ டோதும்
மாயா வாதப் பேயோர் தம்பால்
கo. கட்புலந் தானும் பெட்பொடு படரா
விதமே யனைறு மிதமென் றுரைத்தும்
காலமே தெய்வங் கருமமே கருத்தாச்
சத்தமே யிணையில் லத்தெனக் கிளந்து
நாத்திகம் பேசி வாய்த்தழும் பேறியுங்
கரு. திரிவோ ருறவை மருவா தளித்தும்
கடல்கடை ஞான்று படர்தர வெழுந்த
ஆலவி டங்கண் டோலமென் றோடி
அருந்ததி யனைய பிருந்தையைப் பெட்டுக்
கரவொழுக் காக விரவிட வனையாள்

அக்குறிப் போர்ந்தே சிக்கெனத் தானே
பழிப்புறு மிவ்வுட லொழிக்குவ லென்று
தீயினை வளர்த்தி மாய்குறக் கண்ட
அத்தேத் துளமிகப் பித்தே றினளாய்ச்
சாம்பரில் வீழ்ந்து தேம்பித் திரிந்தே
தசமுகன் றனைய னிசைவுடன் வாளால்
மாயச் சனகியை யேயவே வெட்டப்
பார்த்து வெரீஇ வேர்த்தழு திரங்கி
இன்னும் பலவாப் பன்னுந் துயரொடு
பலப்பல பிறவி கலப்புற நாளும்
கொண்டே யுழிதரு விண்டே பரமென
ஐந்திரு ணூல்வழி வந்தோர் வீழும்
படுகுழி வீழாத் திடவறி வீந்தும்
இன்னோ ரன்ன புன்னெறி மாக்கள்
பின்னெவ ருளரோ வன்னவர் தங்கள்
முன்னரு நில்லா முதன்மை நல்கி
தானே வந்து தடுத்தாட் கொண்டு
சைவசித் தாந்த மெய்ந்நெறி வழங்கி
ஆனா வின்பத் தரும்பெறல் வாழ்விற்
செம்மாந் திருக்குந் திருவமின் றளித்தான்
பொல்லா ரருணெறி கல்லா வெற்கும்
நொச்சியம் பதியின் முச்சகம் பரவ
மெய்கண்ட நாம மேவுங்
கைகண்ட வின்பக் கருணையங் கடலே. (அ)

வெண்பா.

கற்ற வறிவாலே காசினியி னின்னருளைப்
பெற்றவரைப் போலே பிதற்றுவேற்—குற்ற
இளமர்ப் பதிவாழு மெந்தையே மெய்கண்டா
தெளிய விரங்கியருள் செய். (௯)

கலித்துறை.

செய்வான கருவி நிலஞ்செயல் காலநற் செய்பொ
ருளோர், டெய்தா வருமிவை யாறு மொருவினை யேற்
குமென்பார், மெய்யா ஹுறப்புரி நின்வினைக் கென்செ
யன் மேவக் கொண்டாய், மையார் பொழிலிள மர்ப்
பதி மெய்கண்ட மாதவனே. (௧௦)

விருத்தம்.

தவமே புரிந்து னடிபேணு மன்பர் தமையே யடை
ந்து தமியேன், பவமே தவிர்ந்து பரபோக மாய் பய
னே திளைக்க வருள்வாய, அவமே திரிந்து தினமே
கழித்து னடியேன் வருந்த லறமோ, நவமே பொரு
ந்து மிளமர்ப் பதிக்க ணவிலுண்மை கண்ட குருவே.

ஆசிரியப்பா.

குருவென வந்து குவலயந் தன்னில்
இருவினை நீக்கி யெனையரு கிருத்தி
முப்பொரு ளுண்மை மெய்ப்படக் கிளத்துவம்
வாட்டமொன் றின்றி கேட்டிநீ யென்று

சிவமே சீவன் சேரிருண் மலமே
மாயை யிரண்டென் றுபயோ ராறும்
அறுதியே யுளவென் றெறுதுள மொப்ப
நன்றெறித் தியம்பி மன்றமற் றவையுண்
முற்பொருள் யாமே புற்கல னீயே
மற்றவை நான்கு முற்றநெற் குமியும்
செம்பிற் களிம்பும் பம்பிய வாறே
நின்னிடை நீங்கா மன்னிருட் கட்டே

அவற்றுள்

சிவமா மெம்மியற் செப்புங் காலை
நித்திய நின்மல நிரஞ்சன நிராமய
நிர்க்குண நிச்சல நிர்விகா ரம்பரம்
சுத்தம் முதன்மை தொலைவில் வியாபகம்
ஏகஞ் சுதந்தர மின்பநிர் விடையம்
சத்துவ மகண்டிதந் தத்துவா தீதம்
ஆமிவை முதலாந் தோமறு மியல்பினம்

அதாஅன்று.

ஆன்ம விலக்கண மறையுங் காலை
எந்நிறஞ் சாரு மந்நிற மேயாய்
விளங்குந் தூய பளிங்கு போல
எம்மைச் சாரி னெம்மியல் பேய்ந்தும்
மலத்தைச் சாரின் மலத்தியல் வாய்ந்தும்

உரு. கண்ணுஞ் சார்ந்ததன் வண்ணமே யாயும்
சத்தைச் சார்வுழி சத்தே யாயும்
அசத்தைச் சார்வுழி யசத்தே யாயும்
தயங்குந் திறனுற் சதசத் தாயும்
அறிவித் தன்றி யறியா வாயும்

௩0. யாமென் றுளமோ தாமன் றுளவாய்
எண்ணிறந் தனவாய் கண்ணுவியா பகமாய்
தனவய மிலவாய்த் தலைவனை யுளவாய்ச்
சிற்றறி வோடு சிறுதொழி லினவாய்
மலத்தடை யினவாய் வல்வினைக் கீடாய்ப்

௩ரு. பல்வே றுடலந் தொல்பே ருலகில்
எடுத்தெடுத் தெய்க்கு மியல்பின வாயும்
ஆயபல் லியலு மேயவான் மாவே

அவைதாம்

ஆணவ மொன்றே யமைவிஞ் ஞான
கலர்க ளென்னச் சிலருள ரவரே
அநாதியே யொருமல மமைந்தோ ரென்றும்
விஞ்ஞா னுதி விளம்புமை வகையால்
ஏனைய விருமல மிரிந்தோ ரென்றும்
இருவகை யாக வியம்பப் படுமே

அதாஅன்று

ஆணவங் கன்ம மமையும் பிரளயா
௪ரு. கலர்க ளென்னச் சிலருள ரவரே

அநாதியே யிருமல மமைந்தோ ரென்றும்
பிரளயத் தான்மல பெந்தாம் பெயர்ந்தே
இருமல முடையா ரென்று மென்றும்
இருவித மாக வியம்பப் படுமே
அதாஅன்று
ருo. ஆணவங் கன்ம மார்தரு மாயை
எனுமும் மலங்களு மியற்கையி னுளராய்
சகல ரென்னத் தயங்குனர் பலரே
அதாஅன்று
பாச விலக்கணம் பகருங் காலை
ஆணவங் கன்ம மாயைமா யேயம்
ருரு. திரோதை யென்னத் திகழுமை வகையாய
அவற்றுள்
ஆணவ மேகமா யாருயிர் தோறும்
வெவ்வே றாகி விரகையுந் தொழிலையும்
மறைத்து நின்றே மருவிய தத்தங்
கால வெல்லையிற் கடக்கு மநேக
கூo. சத்திக ளுடைத்தாய்ச் சடமா கும்மே
கன்மமோ வவ்வனுக் கண்மனம் வாக்குக்
காயமென் றியம்ப வாயமூன் றானும்
இயற்றிய புண்ணிய மிரும்பா வம்மே
இவைதாம்
எய்திய பிறப்பி லியற்றிய பொழுதில்

௬௫. ஆகா மியமென் றடைபலந் தோறும
இங்ஙன மாக வீட்டப் பெற்றுப்
பக்குவ முறும்வரை பகர்மதி தத்துவம்
ஆதர வாக வமைமா யையிலே
கிடக்கும் பொழுது கிளர்சஞ் சிதமென
௭௦. றிவற்றாள் பக்குவ மெய்திய வைதாம்
மேல்வரு முடலையு மெய்யது கொண்டு
துய்க்கப் பெறுஞ்சுக துன்பங் களையுந்
தந்துப யன்படு ததிபிரா ரத்தம்
என்றபி தான மேற்கு மென்ப

இனியே

௭௫. மாயையோ விந்து மோகினி மானே
எனமூ வகையா மிவைகளி னுள்ளே
முன்னவை யிரண்டு மொழியினித் திபமே
பின்னது பின்னதிற் பிறத்தலா லசித்தம்

அவற்றுள்

சுத்தம்நித் தியமாய்த் துலங்குவியா பகமாய்
௮௦. அருவமாய்ச் சடமா யான்றசொல் வடிவும்
சுத்தமா கியபொருள் வடிவுந் தோன்றற்
காதிகா ரணமா யலமரல் செயாதாய்
ஒருமல முடையார்க் குறாதநு முதலாய்
வயங்கு மசுத்த மாயையோ வென்னில்

நித்தம் வியாபக நிகழுரு வஞ்சடம்
எனுநான் கியலோ டியம்பு பிரளையா
கலர்க்குத் தநுவொடு கரண புவன
போகஞ் சுத்தா சுத்தமாய்ப் பொருந்தி
மயக்குஞ் செய்வதாய் மருவுமென்ப
பகுதியின் பான்மை பகருங் காலை
விந்துமே லாகி விளங்கி யிருப்ப
தானதின் கீழாய்த் தணிந்த மோகினியின்
தூலமா கியபரி ணமம தாகி
மும்மலத் தினர்க்கே மொழிதரு கரண
புவனபோ கம்மாய்ப் பொருந்தி நாளும்
ஆன்ம வறிவோ டவாத் தொழி லிவற்றை
ஏகதே சத்தன வாக வியற்றி
மயக்கமே செய்யும் வைந்தவம் விந்தின்
காரிய மாகிக் கலந்திடு முயிரைத்
திரோதையா தென்னச் செப்புங் காலை
ஆணவங் கன்ம மார்தரு மாயை
எனுமும் மலங்களை யிருந்தொழிற் படுத்தி
பாகம் வருத்தெம் பகரொரு சத்தியே
இவையே முப்பொரு ளவையி லிலக்கணம்

எனினும்

வண்ணான் புடவையின் மாசினைக்கூட்டி
முன்னுள மாசையு முடிப்பதே பொருவ

யாமே

காரண மதனுக் கியைகா ரியமாய்
மாயை கன்ம மருவுறச் சேர்த்து
வன்மலப் பகையை மாற்றுவ னமக்கே

இதனால்

கக0. பக்குவ மெய்திய பான்மையோர் பலரே

அதனால்

ஒருமல முடையார்க் குணர்விற் குணர்வாய்
இருமல முடையார்க் கீரிரு புயமும்
காள கண்டமுங் கண்ணுறு நுதலும்
உறுமோ ருருவோ டுற்றுநன் கருள்வோம்
கக௫. மானைக் காட்டி மான்பிடிப் பதுபோல்
மூழ்குநர் போலு மும்மலத் தார்க்கே
அருள்வான் வேண்டி யருளா லினைய
மானிட வடிவம் வகித்தீண் டெழுந்தனம்
என்று பலவா யெடுத்தெடுத் தியம்பி
கஉ0 கன்றிய மலநோய்க் கட்டகன் றெய்தும்
ஒன்றி யொன்றா வுண்மையு முரைத்தே
புழுத்த நாயினும் புன்மைய னாய
கல்லா வறிவிற் கடைப்பட் டேனைத்
தன்னடி போற்றுந் தரத்தி னிறீஇ
கஉ௫ இன்னருள் வழங்கி யென்று கொண்டனன்

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமரம் பாடும் பூமரச் சோலை
வளமெலாங் குலவு மிளமர்நற் பதியில்
ஓங்கொளி ஞானப் பிழம்பாய்
வயங்குமெய் கண்ட மாதவ நிதியே. (கஉ)

## வெண்பா

நிதியை நிலத்தைநன் னேரிழையை வேண்டு
மதியை யுடையார் மருவார்—கதியையெம்
கொச்சியம்வாழ் மெய்கண்டா னென்றாட்குத்
உச்சிதரே யல்லா துவண் தொண்டுசெயும் (கங)

## கலித்துறை

உவலைச் சமயிக ளொவ்வா வுரைகொண் டுவரிவைப்பிற், சவலைப் படுமனச் சங்கடந் தீர்த்துத் தமியனையாள், திவளும் பொழிலிள மர்ப்பதி மெய்கண்டதேவையல்லாற், கவலைக் கடற்புகு மெந்தே வரையுங் கருதிலனே. (கச)

## விருத்தம்.

கருவேதனை யறவேயருள் கருணைப்பிர காச
உருவேயெனு மிளமர்ப்பதி யுண்மைத்தரி சனிபாங்
குருவேகுரு வவன்வாய்மலர் குலவுஞ்சிவ ஞான
மருவேமலர் நூலையிணை மருவாவள நூலே. (க௫)

## ஆசிரியப்பா.

நூல்பல தேர்ந்த நுண்புல முடைய
செந்தமிழ் மக்காள் செப்புவது கேண்மோ
வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவ னாகிய முக்கண் மூர்த்தி
ஆதி நாளி லருளிய முதனூல்
இருக்கு யெசுரு சாம மதர்வம்
என்றெடுத் தியம்பு மீரிரு மறையுங்
காமிகம் யோகஜஞ் சிந்தியங் காரணம்
அசிதந் தீபதஞ் சூக்குமஞ் சகச்சிரம்
அஞ்சுமான் சுப்பிர பேதம் விசயம்
நிச்சுவா சஞ்சுவா யம்புவ மாக்கி
னேயம் வீரம் ரௌரவ மகுடம்
விமலஞ் சந்திர ஞான முகவிம்
பம்புரோற் கீதம லளிதஞ் சித்தம்
சந்தா னஞ்சர் வோக்தம் பார
மேச்சுரங் கிரணம் வாதுள மென்ன
நாலே ழாக நவிலா கமமும்
எனவிரு வகையா யிலகு மென்ப

அவற்றுள்

உண்மைப் பொருளை யொரேவழி யுணர்த்தா
தவரவர் பக்குவத் தளவிற் கேற்ப
பலதே வரையும் பாற்பட வகுத்தே

கருமகாண்டங் களுஞ் ஞான
காண்ட மென்ன விண்டிரு வகையாய்
விளங்குந் திறனால் வேதம் பொதுவாய்
புவியோர்க் குரிய பூருவ மாமே

அதனால்

ஒன்றே பதியவ் வொன்றுஞ் சிவமே
என்றெடுத் தியம்பி யெண்ணி லாருயிர்கள்
அப்பொரு ளெய்துபு வரும்பெறல் வாழ்வில்
தலைப்படு நெறியாஞ் சரியை கிரியா
யோக ஞான வொழுக்கங் களையும்
இன்றி யமையா வேண்டிய பிறவும்
செப்புந் திறனாற் சிவாகமஞ் சிறப்பாய்
சத்தினி பாதத் துத்தமர்க் குரிய
சித்தாந்த மாகித் திகழ்ந்ததை யன்றே
அங்ஙன மாய வவ்வா கமமும்
வடமொழி நன்கு வல்லார்க் கன்றி
ஏனை யோருக் கெட்டுணை யேனும்
பயப்பா டிலவாம் பான்மை யோர்ந்தே
முப்பொரு ளுண்மை முறைபெற வகுத்துக்
கரதலா மலகங் கடுப்பக் காட்டித்
திடமுறு மொழியாந் திராவிட மொழியில்
நாற்பா னெறியின் மேற்பா லவற்கே
செவ்விதி னொருநூற் றிகழ்தர வளித்தான்

அது தான்

தன்பெய ரொருகாற் றானுறச் சாற்றினும்
வன்பவப் பகையை மாற்று மருந்தாம்
சிவஞான போதமென் றெய்வத நூலே

இனியே

அந்நூ லருளிய வருட்பெருங் கொண்மூ
ஆர்கொ லென்னி லடியே முய்யப்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ப் பதிதான்
கைதவ மிலாது செய்தவப் பயனான்
முந்நூன் மொழிந்த முழுமுதற் பொருளே
இந்நூற் பொருட்டா யிருகண் மூர்த்தியாய்
திருவவ தாரஞ் செய்தருள் செம்மல்
மெய்கண்ட நாம மேவுசிந் தாமணி
கற்றவ ருண்ணுங் கற்பக நறுங்கனி
மற்றவ ரறியா மாணிக்க மாமலை
எளியே னுளமு மிளமர்ப் பதியும்
ஒருவா துறையு மொப்பிலாச் சுடரே

ஆதலின்.

ஞான காண்ட நன்னூ லாய
சாத்திர மதனைத் தமியே முணர்ந்து
எங்ஙனம் வீடுபே றெய்துவ மென்ன
உறுபெருங் கவலை யொழிமி னொழிமின்

அன்னூற் சிரமிசை யமைவிற் றாங்கி
இன்னே னமரு மிருந்தளி சூழ்ந்து
திருமுன் னின்று செங்கை கூப்பி
ஆரா வமுதே வருவே வுருவே
ஞானா கரனே நன்றே வொன்றே
ஊனே வுயிரே வுணர்வே வுளமே
தேனே பாகே திருவே குருவே
கண்ணே மணியே கதியே நிதியே
என்றெடுத் தேத்தி யிருகணீர் வார
நெஞ்சநெக் குருகி நிற்பீ ராகில்
மலபரி பாகம் வாய்ப்ப
எண்ணிய வெண்ணியாங் கெய்துவிர் நன்கே. ()

வெண்பா.

நகர மகர நலிய வகரம்
யகர மெனுமெளியே னெய்திச்-சிகரம்
எனவிளமர் மேவ வின்பார்மெய் கண்ட
தினகரனே நன்கருளிச் செய். (கஎ)

கலித்துறை.

செய்யா வினைகளை யேசெக மீதினிற் செய்து மன, நையா வுழன்றது போதுமென் றேயின்று னற்சமு கம், உய்வா னனியுளங் கொண்டடுத் தேனினி யுன்ன ருளே, மொய்வாய் மலர்த்தட நொச்சிய மெய்கண்ட முன்னவனே. கஅ

விருத்தம்.

முற்பலப்பல வுற்பவத்து முயன்றநற்றவ முற்றிய
மோனஞான வரோதயப்பர முத்தராமவ ரன்றியே,
புற்புதம்பொரு முடலையேநிலை யென்றுபொய்ப்பொ
ருள் செய்துவெம் பூவையார்வய மாகிவீண்படு புன்
மையாளருக கொல்லுமோ, கற்பகப்பொழிற் கண்டு
மண்டிவை கமழ்செழுநகவி னுக்கொருக் காலுமொவ்
வில மொவ்விலம் மெனக் கருதிவான்மறை யத்திகழ்,
அற்புதப்பல சோலைசூழ்தரு மணிகொளெச்சிய நச்
சிய வமலரூபமெய் கண்டதேசிக னென்றநூற்பொருள்
காணவே. (கஅ)

ஆசிரியப்பா.

காடும் மலையுங் கனலும் புனலும்
தேடி யோடித் தெறுபசிக் குடைந்து
காயுங் கனியுங் காற்றுஞ் சருகும்
அருந்திப் பன்னா ளருந்தவங் கிடந்தே
என்பெழும் யாக்கைய ராகி யென்னே
வாணாள் கழிப்பீர் வீணே முனிவீர்
தாமாந் தன்மை சார்ந்தார்க் கருளும்
ஓமாம் புலியூ ரொண்பதி தோன்றி
சரியை கிரியைத் தனிநிலை தேர்ந்தே
எண்வகை யோகப் பண்பது முற்றி
அம்மைகுண் டலியாற் செம்மைநல் லமிர்தம்

உண்டுண் டுறங்கா வுலப்பிலா னந்தச்
சண்முக முனிவன் றருதவச் சுதனாய்
வருமொரு பெரியோன் மறைசை நகரெழு
தாயும் மான தயாபர மூர்த்தி
வழிவரு தூய மாசிவ வேதியன்
அவராஜ யோக வலை மகற்றும்
சிவராஜ யோகத் தேசிகர் மாமணி
பொய்கண்ட ஞானப் புன்மை தவிர்க்கும்
திருமெய் கண்ட சிவாசா ரியன்றன்
செங்கம லப்போ தங்கழற் பாதப்
பற்றே பற்றாப் பற்றி யுய்ந்தோன்
வடமொழி தென்மொழி மருவும் மகோததி
சுத்தாத் துவிதச் சிக்காந் தச்சுடர்
சிவப்பிர காசத் தெள்ளமி தானம்
கொண்டொளிர் கோமான் குணங்கெழு தகை
பன்மா ணவரொடு நன்மா மலர்கொடுத்
தூய்த் தொழு தேத்துந் தேத்துளிப் பொதும்பர்
காவிரி நதியின் கரைமருங் கொளிரும்
இளமர் வளநக ரெய்தி யாங்கண்
திப்பியம் பொலியுஞ் சினகரத் தமர்ந்த
ஒப்பிலாத் தூய வொள்ளொளிப் பிழம்பை
மெய்கண்ட தேவ வித்தகப் பொருளைக்
குடந்தம் பட்டுக் குழைந்தினி தேத்தில்

௩ஞ ஐயுற வில்லா தனனே
எபபதம் வேண்டினு மெய்துதன் மெய்யே (உ௦)

வெண்பா

மெய்கண்ட தேவை விழுபபொருளை வித்தகனைக்
கைகண்ட வின்பக் கனியினை—உய்கொண்ட
சிததாநத நனனிலைச் சேனா பொழிலிளமா
கததாவைக காண்பதுவே கண். (உக)

கலிததுறை

கண்ணு ரொளிவிண் கதிரொளி யோடு கலபபது
போல, தண்ணு ருனதருட டாரக மோடு தககலந
துப, புண்ணு ருளதத னிரண்டறக் கூடிய பொலி
வதென்றே, எண்ணுன கறமபயி னுச்சிய மெய
கண்ட வெமமிறையே. (உஉ)

விருததம

இறையுமெம பவநோ யகற்றிவீ டளிததற் கிசைந
திலா யெனனினு மெழிலசே, குறைவினின சநதா
னதெழு மடியாக குறுகியன னவர்பணி குயிற்றி,
இறைகெழு நின் னூற பொருள்விசா ரணைசெய் திருக்
குமா றேனுநன் கருளவாய், முறைகண்முன னுனகு
முழுநகுறு மிளமர் முதல்வனே மெய்கண்ட மணியே.

ஆசிரியபபா

மணிபல குயிற்றி யணிகெழு மாளிகை
மேனிலத் தமருமு பானலங கண்ணியா

ஆடவ ரொடுதா மூடலிற் றீர்த்த
விலைவரம் பறியாக் கலன்பல மறுகில்
வயந்தரு சிறாரின் சயந்தனந் தடையும்
வளமலி செல்வத் திளமர்நன் னகரில்
உலகிருள் சீக்கு மிலகொளிப் பரிதியின்
ஆருயிர்த் திரளைச் சேரிரு டேய்த்துத்
தவாதுறை ஞான திவாகர னாய
மெய்கண்ட தேவச் சைவசித் தாந்த
பரமா சாரியன் வரசரோ ருகமென்
பொற்கழல் போற்றி மொற்கமி லடியார்
திரிமல மகன்று திருவரு ளோடே
விரவுறு மின்ப மெய்ந்நிலை யாய
ஒன்றி யொன்று வுயர்பத மொன்றே
வேட்டன ராகி விரிகதி ரிரவி
எங்கெழுந் திடினு மிங்கெமக் கென்னென்
றிருப்பதை யன்றி யிதனின்வே றாய
ஐந்தரு நீழ லிந்திரன் பதமும்
ஆயிரம் பணமுடிக் காய்சினத் தனந்தன்
மீமிசைத் துயில்கூர் நேமியோன் பதமும்
ஏனைய பிறவு மெய்த
நினைவது முளதோ கனவினு மிலையே. (உச)

வெண்பா.

இலையே பிரமமென்ப தெம்மையலா தென்னும்
புலையார் புலிக்கோர் பொறையாய்-அலைவாரே

அல்லாது நொச்சியமெய் கண்டாருக் கன்புசெய்து
நல்லாரா யுய்வாரோ நன்கு. (உரு)

### கலித்துறை.

நன்றே யுனதடி போற்றுந் திறமின் னுயனையேற்
கென்றே யுனதரு ளெய்துங்கொ லோவென வெண்
ணியெண்ணி, நின்றே னெனக்குனை யல்லாற் கதியிந்த
நீணிலத்தில், இன்றே யிளமர்மெய் கண்டா வெளி
யனை யேன்று கொளே. (உசு)

### விருத்தம்

என்று கொண்டிங் கென்னை நின்ன திணைய டிக்
குத் தொண்டென, கான்று விட்ட சோறெ னப்ப
வஞ்ச வாழ்வைக் காட்டினை, தோன்று மற்றி தற்கு
மேலும் வேறு பேறு சொல்வதென், சான்று நின்ற
நொச்சி யந்தை மெய் கண்ட சாமியே. (உஎ)

### ஆசிரியப்பா.

சார்ந்தார்க் காத்தற் றலைவர் தங் கடனென்
றுருவா தொளிருன் றிருவாய் மொழியை
உளங்கொண் டாய்வுழி யுலகோர் மூன்றினும்
மூவா ஞான முழுமுதற் றலைவன
ரு. நீயே யாக நிகழுக் காண்டலில்
அடியே னின்றுன் னங்கழ லெய்தினன்

சிவப்பிர காசத் தேசிகன் முதலாம்
தவப்பிர காசர் தரும்பணி யுவந்தே
இளமர்ப் பதிவயி னினிதுவீற் றிருக்கும்
௪0. மெய்கண்ட தேவ விமலமா மணியே
வழுவா நின்னுரை வாய்ப்பத்
தொழுவேன் றுயரந் துடைப்பதுன் கடனே

வெண்பா.

உன்கடனே யன்றோ வொதியேனை யுய்வித்தல்
என்கடவே னைமை யிழிதகையேன்—மின்கடவும்
மாட மலியிளமர் வாழ்மெய்கண் டாநின்னில்
தாடலைபோற் கூடுநிலை தா. (உகூ)

கலித்துறை.

தாரா தொழியி லுயர்சிவ போகந் தரணிமிசை
யாரா தரிப்பவ ருன்னடி யேனை யளவில்பவந்
தீரா தடைந்தலுத் தேனினி யேனுமித் தீப்பிறவி
வரா தருளிள மர்ப்பதி மெய்கண்ட வானவனே (௩0)

விருத்தம்

வானநாட் டகத்தும் வாய்த்திடா வளமை மலியிள மர்ப்பதி வைகும், ஞானநா யகனே மெய்கண்ட சிவமே நாடுகே வலத்தினின் றெடுத்துத், தீனனேன் றனையிச் சகலத்தி லுய்த்த திருவருட் டிறத்தையாய் வுழிமேல், மானமார் சுத்த மளித்திடற் கன்றோ மற்று தும் வழங்குவ தென்றே. (௩க)

### ஆசிரியப்பா.

என்றுபன் னிருவ ரிம்பரிற் றோன்றிப்
புறத்துறை யிருளைப் போக்குதற் பொருவந்
தேவர் திருவாய்ச் செவ்விதின் மலர்ந்த
செந்தமிழ்ப் பன்னிரு திகழ்சூத் திரமும்
ஆருயிர்த் திரளி னகத்திரு ணீக்கி
அருஞ்சிவ ஞானப் பெருங்கதிர் பரப்பி
விளங்கு மென்ன வெள்ளறி வுடையேன்
தொகையாற் றொழிலாற் சொற்றன னேனும்
உபமா னத்தினு முபமே யம்மே
சிறப்புடைத் தென்னச் செவ்விதி னன்கு
தேர்ந்தே னன்றித் தெளியே னல்லேன்
விரிபொழி லிளமர் மேவும்
மெய்கண்ட தேவ விரைந்தரு ளெனையே (௩௨)

### வெண்பா.

என்னைநின் னைத்தன்னை யிற்றெனக்காட் டாத
முன்னை யிருண்மலத்தை மோதியே-பின்னையே
நீயேநா னாக நிலவவருள் செய்யிளமர்
ஆயேநேர் நன்மெய்கண் டாய். (௩௩)

### கலித்துறை.

ஆய்ந்தா யலைமெய்ச் சிவஞான போதத் தரும்
பொருளைத், தோய்ந்தா யலையிள மர்ப்பதி மெய்

கண்ட தூயனடி, ஏயநதா யலைமற் றவனடி யாருற வேழைநெஞ்சே, காய்ந்தா யலைமட வார்மய லென் கொல் கதியுனக்கே. (௩௪)

விருத்தம்.

உனையே யலதொரு கதிவே றிலையெனு முரையே யலதுனை யொருநாளும், புனையே னலர்கொடு புக ழேன் றுதிகொடு பொருளே யெனநனி மனமார, நினையே னெனினுமு னடியே னெனுமொழி நிலமேல் வரையிடு சுடர்நேராம், பினையே யுனதெனை மெது வோ மெய்யுணர் பேரா ரிளமர்ப் பெருமானே. (௩௫)

ஆசிரியப்பா.

பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ப் பதியில்
செந்தமிழ் நாடு செய்பெருந் தவத்தால்
வந்தவ தரித்த மாசிலா மணியே
எய்ப்பினில் வைப்பே யிலகொளி விளக்கே
௫. மெய்கண்ட தேவச் சைவமா முகிலே
திப்பியம் பழுத்த தேசிக வடிவே
சத்தறி வின்பத் தற்பரம் பொருளே
இளமா ரமுதே யெளியேன் பேறே
தேவர் திருமுன் செய்வினை ணப்பம்
௧0. ஒன்றுள தனுதா னொதியே னென்றுஞ்
சுடுநர கழுந்தித் துன்புழந் திடினும்

நின்னடி மாட்டு நிறைபே ரன்பே
ஈங்கிது நினக்கின் றீவதன் றென்னில்
உலகினி துய்வா னொருநீ யுரைத்த
கரு. தன்னே ரில்லாத் தனிச்சிவ ஞான
போத மென்னுஞ் சாத நூலின்
பொருளினை யேனும் புந்தி
மறவா திருக்கும வரமளித் தருளே. (௧௬)

வெண்பா.

தரும வடிவாய்த் தழைமெய்கண் டானைத்
திருவிளமர் மேவித் தினமுங்—கருதி
அருச்சிப்பார் யாரே யவரேயென் னுளுங்
கருச்சிக்கார் காண்பார் கதி. (௧௭)

கலித்துறை.

கல்லா ரவையி னடுவிருப் பேனைக் கருணையினல்
நல்லா ரவையி னடுவினிற் கூட்டியிஞ் ஞாலமிசைப்
பொல்லா ரருணெறிப் போதம் வழங்கிப் புரந்தனனல்
செல்லார் பொழிலிள மர்ப்பதி மெய்கண்ட தேசிகனே.

விருத்தம்.

தேவரும் வியக்கு மிளமர்நற் பதியிற் சிறந்தொளிர் மெய்கண்ட சிவமே, சீலனு மெனக்கு மலம்வியா பக மோ திகழ்வியாப் பியங்கொலோ வென்னின், மேவரு மிரண்டு மன்றது வியாத்தி விலக்கிட விலகிடு மென்

ற வொழிப்ப தென்றுமற் றெந்தா யொழிப்
'யலால் யாரே. (௩௯)

### ஆசிரியப்பா.

ஏடார் கமலப் பீடார் மனையில்
பொற்பவீற் றிருக்கு முற்பவப் புத்தேள்
தாழா தியற்று மேழேழ் புவியில்
வெவ்வே றுருக விளங்கும பிறவி
அன்றொ டொட்டே யிந்நாள் காறும
எளியே னெய்ந்தவை யிலக்கங் காணில்
வானின் மீனும் வண்புவி மணலும்
ஆருயிர்த் தொகையு மமையு மென்ப
அன்றியு மனைய வாழ்பவந் தோறும்
எய்திய துன்போ விதிற்பன் மடங்கே
இனுமிப் பிறவி யெய்து மென்னில்
என்றே யெளியே னெய்துவ னின்னே
இறப்பும் பிறப்பும் மெய்துபல் துன்பும்
என்று நினக்கே யியற்கையா மென்னில்
ஆண்டவ னெனநீ யடியவ னெனயான்
இருத்தலி னென்னே யெய்துறு பயனே
ஆதலின்
இளமர்ப் பதியி லேய்மெய் கண்ட
தேசிக மணியே சிறியேன்
வன்பவ நீக்கி வழங்கருட் சீரே. (௪௦)

# ஸ்ரீ மெய்கண்டதேவர் நான்மணிமாலை.

வெண்பா.

மெய்கண்டான் வாழி விளங்க வவனுரைத்
தெய்விகநூல் வாழிச் செகம்வாழி-சைவந்
தழைக்குமவன் சந்தானஞ் சந்ததமும் வாழி
செழிக்குமினூல் வாழி சிறந்து.

எச்சிலிளமர்ப்பதி
ஸ்ரீ மெய்கண்டதேவர்
நான்மணிமாலை முற்றுப்பெற்றது.
ஸ்ரீ மெய்கண்டதேவர் மென்கழல் வாழ்க.

வெண்பா.

மாயாவா தப்பேயை மாற்றி யெனையாண்ட
தூயா திருவுறந்தைத் தோன்றலாம்—நேயாகேள்
நீயருளு மெய்கண்ட நீணான் மணிமாலை
நாயடியே னோரவரு ணன்கு.

அ. ரா. அ.
பூவாளூர்.